




















மலர்:- 33, 27 March 2026 இதழ்:- 12

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# தேசியப் பாதுகாப்பைக் காரணம் காட்டி தகவல்களை மறைக்க முடியாது! கடற்படையின் மேன்முறையீட்டை நிராகரித்தது மேன்முறையீட்டு நீதிமன்று




தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்படும் தகவல்களை 'தேசிய பாதுகாப்பு' என்ற போர்வையில் தன்னிச்சையாக மறுக்க முடியாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பொன்றை வழங்கியுள்ளது. 2022 ஆம் ஆண்டு ஜீலை மாதம் ஏற்பட்ட மக்கள் போராட்டத்தின் போது, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ 'எஸ்.எல்.என்.எஸ் கஜபாகு' என்ற கடற்படைக் கப்பலில் ஏறியது தொடர்பான தகவல்களை வெளியிடுமாறு தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு முன்னர் (4ம் பக்கம் பார்க்க)

## பதவிக் காலம் முடிவதற்கு முன்பே ட்ரம்ப் பதவி இழக்க வாய்ப்பு! இணைய கருத்துக் கணிப்புக்களில் இருந்து தகவல்!

# ஶ்ரீதரன் - சுமந்திரன் சமரசத்துக்கு தயார்! நிபந்தனைகளில் தொடர்ந்தும் கிடுகுப்பிடி!

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் சிறிதரன் சுமந்திரன் இடையே ஏற்பட்டிருந்த முரண்பாடுகள் காலவோட்டத்தில் இருவேறு அணிகளாக பிரிந்து நின்று பொதுவெளியில் பரஸ்பரம் பகிரங்க விமர்சனங்களை வெளிப்படுத்தும் அளவுக்கு மோசமான நிலைமையை அடைந்துள்ளன. இந்த நிலைமையானது, அண்மைக் காலத்தில் தமிழரசுக் கட்சிக்கு ஆணை வழங்கிய வடக்கு, கிழக்கு மக்களிடையே பலத்த அதிருப்திகளையும், பெரும் சலிப்பையும் ஏற்படுத்தியுள்ளதோடு ஆளும் தேசிய மக்கள் சக்தியின் ஊடுருவல்களுக்கும் வழிவகுத்து வருகின்றது. (17ம் பக்கம் பார்க்க)



# போர்களும் பிரசாரப் போரும்

போர் என்பது தனியே படைகள் மோதிக் கொள்ளுகின்ற களங்களைக் கொண்டது மாத்திரமல்ல. உண்மையும், பொய்களும் மோதுகின்ற பிரசாரப்போர்களையும் கொண்டதுதான். (13ம் பக்கம் பார்க்க)

# யாழில் விரிவுரையாளர் படுகொலை:- மகள் கூறிய வாக்கு மூலம் பொலிஸ் விசாரணையில் வெளிப்பட்ட திடுக்கிடும் தகவல்!

எந்தச் செய்தியையும் முந்தித் தரும் ஒரே ஏடு ஈழநாடு

THINKING OF

# SELLING OR BUYING A HOME?


www.AgentSiva.com

*Your neighborhood sales representative*

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

RE/MAX ACE REALTY INC., BROKERAGE — EXPERIENCE THE DIFFERENCE — INDEPENDENTLY OWNED & OPERATED

we are ace



**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com





23 Years Real Estate Experience


150 Consumers Rd #109, North York, ON M2J 1P9, Canada


Bus: 416-293-4500


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


## Adelaide Ave E / Simcoe St

**Oshawa** $699,000
3+2 Beds • 2 Baths • 9 Rooms
high-demand rental area


## Kingston Rd & Sheppard Ave E

**Scarborough** $710,000
3+2 Beds • 3 Baths • 8 Rooms
open living and dining area


## Islington Ave / Steeles Ave W

**Toronto** $749,000
4 Beds • 2 Baths • 8 Rooms
Corner Condo Townhouse

## Neilson Road & Sheppard

**Scarborough** $839,000
4+1 Beds • 3 Baths • 7+3 Rooms
Location, location, location!

## Danforth and Dawes

**Toronto** $839,999
2+1 Beds • 2 Baths • 7 Rooms
Corner suite, unobstructed views

## Williamson & Westney

**Ajax** $849,000
3 Beds • 3 Baths • 7 Rooms
Detached 2-storey home

## Rogers and Dufferin St

**Toronto** $849,999
3 Beds • 2 Baths • 6+1 Rooms
fully renovated from top to bottom


## Markham Rd & Lawrence Ave

**Scarborough** $999,000
3+3 Beds • 4 Baths • 6+5 Rooms
fully renovated bungalow


## Harmony Road / Conlin Road

**Oshawa** $999,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Upgraded from top to bottom

## Cameo St / Burkolder Dr


**Pickering** $999,900
3 Beds • 3 Baths • 7 Rooms
Newly built detached home

## Hwy10 / Hwy 89

**Shelburne** $999,900
5 Beds • 5 Baths • 10 Rooms
Luxurious savile row model home

## Markham/Steeles

**Markham** $999,999
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Fin.basement with sep.entrance

## Markham Rd/ Lawrence Ave E

FOR LEASE
**Scarborough** $2,700
3 Beds • 1 Baths • 6 Rooms
Recently refreshed with new paint

## Markham Rd & Sheppard Ave

FOR LEASE
**Scarborough** $2,250
1+1 Beds • 1 Bath • 5 Rooms
Open concept w/ natural sunlight

## Simcoe St/ Windfields Farm Dr

FOR LEASE
**Oshawa** $1,500
1 Bed • 1 Bath • 3 Rooms
Basement with sep entrance

## Markham & Denison

FOR LEASE
**Markham** $1,450
1 Bed • 1 Bath • 4 Rooms
Basement with sep entrance

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 - 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணயையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங் களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தை களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# என் இனிய வாசகர்களே! கலா ரசிகர்களே! நெஞ்சார்ந்த நன்றிகள்!

நெஞ்சார்ந்த நன்றிகள் உறவுகளே!

21 மார்ச் 2026 சனிக்கிழமை நடை பெற்ற உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 33வது ஆண்டு விழா, சிறப்பும் செழிப்பும் சங்கமித்த ஓர் இனிய பொன்மாலைப் பொழுதாக அன்றைய நாள் உயர்ந்து நின்றது. காலத்தின் சோதனைகளைத் தாண்டி, வாசகர்களின் இதயங்களில் வேரூன்றி வளர்ந்த ஈழநாடு பத்திரிகையின் பயணம், இவ்விழாவின் மூலம் மேலும் ஒரு காலத்தைப் பதிவு செய்து போய் இருக்கின்றது..

அரங்கம் இயலும் இசையும் கலந்து சிறப்பான விழாக் கோலமாகக் காட்சி யளித்தது. விழாவில் பங்கேற்ற வாசகர் கள் கலா ரசிகர்களின் உற்சாகமும், அரங்கேறிய நிகழ்ச்சிகளின் நயமும் இணைந்து, அந்த மாலை நேரத்தை மறக்க முடியாத நினைவாக மாற்றின. ஈழத்தில் இருந்து வருகை தந்திருந்த தமிழருவி சிவகுமாரன் அவர்களின் உரைகளில் ஒலித்த சிந்தனைகளும் பிரபல தென்னிந்தியத் திரைப்படப் பாடக ரும் கர்நாடக இசைக் கலைஞருமான சத்தியப் பிரகாஷ் அவர்களின் குரல் இசையில் ஒலித்த காலத்தால் அழியாத பாடல்களும் பார்வையாளர்களின் இதயங்களை நெகிழச் செய்தன.

இந்த விழாவின் வெற்றிக்குப் பின்னால் உழைத்த அனைவரின் முயற்சியும், அர்ப்பணிப்பும் பாராட்டுக்குரியது. குறிப்பாக நண்பர்கள் ஞானபண்டிதர் யோகா ஆகியோர் என் நெஞ்சத்தை விட்டு அகலாதவர்கள். அதேபோன்று எனது சக ஊடகத்துறை நண்பர்கள் குறிப்பாக யுகம் வானொலி அதிபர் திரு கணபதி ரவீந்திரன் அவர்கள் தொட ர்ச்சியாக 3 நாட்கள் எம்மோடு பயணித் தார். அத்துடன் எமது அறிவித்தலை பிரசுரித்து உதவிய உலகத்தமிழர் பத்திர்கை உதயன் பத்திரிகை தமிழர் தகவல் சஞ்சிகை ஈஸ்ட் எப்.எம் வானொலி ஈஸி 24 செய்தி கிருபா கிசான் அனலை எக்ஸ்பிரஸ் மற்றும் பல்வேறு வகைகளில் தங்களது முகநூல்களில் பதிவேற்றி ஆதரவு தெரிவித்த அனை த்து அன்பு உள்ளங்களுக்கும் அன்று முதல் இன்றுவரை எமது பணிக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கி வருகின்ற வர்த்தகப் பிரமுகர்கள் அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றிகள்.

பக்க வாத்தியக் கலைஞர்கள் முதல் மேடைப் பணியாளர்கள் வரை, ஒவ்வொ ருவரின் பங்களிப்பும் இந்த நிகழ்வை உயர்த்திய தூண்களாக அமைந்தது. ஆதரவு வழங்கிய அன்பர்கள், உற்சாக மாகக் கலந்து கொண்ட கலா ரசிகர்கள் தங்கள் வருகையால் விழாவை மேலும் சிறப்பித்தனர்.

முப்பத்து மூன்று ஆண்டுகளாகச் சமூக த்தின் சிந்தனையையும் உணர்வையும் விடுதலை வேட்கையையும் செதுக்கிக் கொண்டிருக்கும் ஈழநாடு பத்திரிகை இனி வரும் காலங்களிலும் போற்றுவோர் போற்றட்டும் துழுதி வாரித் தூற்றுவார் தூற்றட்டும் தனது இலட்சியப் பயண த்தைத் தொடர்ந்து கொண்டே இருக் கும்.

இந்த விழா ஒரு நிறைவு அல்ல. புதிய தொடக்கங்களுக்கான உறுதியான அடித் தளமாகும். மீண்டும் விழாவில் கலந்து கொண்ட கலா ரசிகர்களுக்கும் விழாவில் கலந்து கொள்வோம் என உறுதியாகவும் நம்பிக்கையாகவும் தெரிவித்து விட்டு கலந்து கொள்ளாமல் நழுவிப் போன நல்ல உள்ளங்களுக்கும் என் இதயம் கனிந்த பாராட்டுகளும், மனமார்ந்த நன்றி களும். விழா நிகழ்வின் போட்டோக்கள் பக்கம் 18 19 பார்க்க)



தேடிச் சோறு தினந்தின்று- பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று -பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து - நரை
கூடிக்கிழப்பருவ மெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின் மாயும் -பல
வேடிக்கை மனிதரைப் போலே -நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ?

நன்றி:- போட்டோ ஐயா 4 யூ




**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# தேசியப் பாதுகாப்பைக் காரணம் காட்டி தகவல்களை மறைக்க முடியாது! கடற்படையின் மேன்முறையீட்டை நிராகரித்தது மேன்முறையீட்டு நீதிமன்று




தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்படும் தகவல்களை, 'தேசிய பாதுகாப்பு' என்ற போர்வையில் தன்னிச்சையாக மறுக்க முடியாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பொன்றை வழங்கியுள்ளது.

2022 ஆம் ஆண்டு ஜீலை மாதம் ஏற்பட்ட மக்கள் போராட்டத்தின் போது, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ 'எஸ்.எல்.என்.எஸ் கஜபாகு' என்ற கடற்படைக் கப்பலில் ஏறியது தொடர்பான தகவல்களை வெளியிடுமாறு தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு முன்னர் உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவை எதிர்த்து இலங்கை கடற்படை தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை விசாரணை செய்த போதே நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

ஏ.ஏ.எம்.ஆர். அலி என்பவரால் 2022 செப்ரெம்பரில் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் விண்ணப்பத்தில் முன்னாள் ஜனாதிபதி கப்பலில் பயணித்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா? பயணத்தின் தூரம், செலவு மற்றும் அந்தச் செலவை பொறுப்பேற்றது யார்? போன்ற விவரங்கள் கோரப்பட்டிருந்தன. எனினும், தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி கடற்படை இந்தத் தகவல்களை வழங்க மறுத்திருந்தது.

பின்னர் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு தலையிட்டு, பயணச் செலவு மற்றும் அதற்கான நிதி மூலம் தொடர்பான விபரங்களை மாத்திரம் வழங்குமாறு கடற்படைக்கு அறிவுறுத்தியது.

இதனை எதிர்த்தே கடற்படை மேன்முறையீடு செய்திருந்தது. நீதியரசர் கலாநிதி சுமுது பிரேமச்சந்திர மற்றும் நீதியரசர் ஆர். குருசிங்க ஆகியோர் அடங்கிய குழுவில் இந்தத் தீர்ப்பை வழங்கியது. அதில் தகவல்களை மறுப்பதற்கு 'தேசிய பாதுகாப்பு' என்பது ஒரு போர்வை அல்ல. கோரப் பட்ட நிதி தொடர்பான தகவல்களால் தேசிய பாதுகாப்புக்கு எவ்வாறு அச்சுறுத்தல் ஏற்படும் என்பதை கடற்படை உரிய ஆதாரங்களுடன் நிரூபிக்கத் தவறிவிட்டது.

வெறுமனே பொதுப்படையான கூற்றுக்களை முன் வைத்து தகவல்களை வழங்காமல் இருக்க முடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் உத்தரவை உறுதிப்படுத்திய நீதிமன்றம், கடற்படையின் மேன்முறையீட்டை தள்ளுபடி செய்தது. இதன் மூலம் வெளிப்படைத் தன்மை மற்றும் தகவல் அறியும் உரிமை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# பதவிக்காலம் முடிவதற்கு முன்பே ட்ரம்ப் பதவி இழக்க வாய்ப்பு! இணைய கருத்துக் கணிப்புக்களில் இருந்து தகவல்!

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது இரண்டாவது பதவிக் காலம் முடிவதற்கு முன் மீண்டும் பதவி நீக்கத்திற்கு உள்ளாகும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாக ஒன்லைன் கணிப்பு தளங்கள் தெரிவிக்கின்றன.

கல்ஷி என்ற கணிப்பு தளத்தின் படி, ட்ரம்ப் மீண்டும் பதவி நீக்கப்பட வாய்ப்பு தற்போது 69 வீதமாக உயர்ந்துள்ளது. இது 2024 நவம்பரில் இந்த கணிப்பு தொடங்கியதிலிருந்து பதிவான மிக உயர்ந்த அளவாகும். தேர்தலில் வெற்றி பெற்றதையடுத்து ஆரம்பத்தில் இந்த வாய்ப்பு 33 வீதமாக இருந்தது.

இதே கேள்வியில் பொலிமார்க்கெட் தளத்தில் 46 வீத வாய்ப்பு காணப்படுகிறது. இந்த சந்தை சமீபத்தில் உருவாக்கப்பட்டதாகவும், அதில் வாய்ப்புகள் சுமார் 50 வீதம் அளவில் மாறாமல் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

ட்ரம்ப் தனது முதல் பதவிக்காலத்தில் இருமுறை பதவி நீக்கம் செய்யப்பட்டவர். 2019ஆம் ஆண்டு உக்ரைன் தொடர்பான விவகாரம் மற்றும் 2021 ஆம் ஆண்டு ஜனவரி 6 கபிட்டோல் கலவரச் சம்பவம் தொடர்பாக அவர் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் இரு முறைவும் செனட் அவையில் அவர் விடுவிக்கப்பட்டார். இந்நிலையில், இந்த கணிப்பு தளங்களின் மதிப்பீடுகள் எப்போதும் துல்லியமானவை அல்ல என நிபுணர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அரசியல் சூழ்நிலைகள் மற்றும் பொதுமக்களின் எதிர்பார்ப்புகள் போன்றவை இத்தகைய கணிப்புகளை பாதிக்கக்கூடும்.

மேலும், இத்தகைய கணிப்பு சந்தைகள் குறித்து சர்ச்சைகளும் எழுந்துள்ளன. கிறிஸ் மூர்பே உள்ளிட்ட சில அரசியல்வாதிகள், அரசாங்க நடவடிக்கைகள் தொடர்பாக பணம் வைத்து கணிப்பது தவறாக பயன்படுத்தப்படலாம் என எச்சரித்துள்ளனர். இதனால், டிரம்ப் மீண்டும் பதவி நீக்கம் செய்யப்படுவாரா என்பது குறித்து உறுதியான முடிவு எதுவும் கூற முடியாத நிலை காணப்படுகிறது.



# தி.மு.க. கூட்டணியில் யாருக்கு லாபம்? யாருக்கு இழப்பு?

திமுக கூட்டணியில் பல ஆண்டுகளாக நீடித்து வரும் பல கட்சிகளுக்கும் ஒற்றை இலக்கத்தில் தொகுதிகள் ஒதுக்கீடு செய்துள்ள நிலையில், சமீபத்தில் கூட்டணியில் இணைந்துள்ள தேமுதிகவுக்கு 10 தொகுதிகளை ஒதுக்கியிருப்பது பெரும் விவாதங்களை எழுப்பியுள்ளது.

வாக்கு வங்கியை இழந்துள்ள தேமுதிகவுக்கு இத்தனை இடங்களை ஒதுக்கியதில் லாபம் தேமுதிகவுக்கு மட்டும் தான், மற்ற கட்சிகளை விட அதிக இழப்பு திமுகவுக்கு தான்' என்கிறார் மூத்த பத்திரிகையாளர் ஆர்.கே. ராதா கிருஷ்ணன் ஆனால் தேமுதிகவுக்கு மாநிலம் முழுவதும் பரவலாக வாக்குகள் இருப்பதை வைத்தே இந்த முடிவை தலைமை எடுத்ததாக திமுக தரப்பு கூறுகிறது.

கூட்டணியிலுள்ள மக்கள் நீதி மய்யம், தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கியதும் அக்கட்சியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. சினிமாவில் ஹீரோவாக இருப்பவர்கள், அரசியலில் ஜீரோ என்பதை கமல் உறுதிப்படுத்தி இருப்பதாகவும், இதே நிலை நாளை விஜய்க்கு ஏற்படுமென்றும்' அதிமுக விமர்சித்துள்ளது. கமலின் இந்த முடிவால் தாங்கள் பெரும் குழப்பத்தில் இருப்பதாக அக்கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

கடந்த 2021 சட்டப்பேரவைத் தேர்தலில், திமுக கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு 25 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட், இந்திய கம்யூ னிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள், மதிமுக ஆகிய 4 கட்சிகளுக்கு தலா 6 இடங்களும் ஒதுக்கப்பட்டன. இவற்றைத் தவிர்த்து, இந்திய யூ னியன் முஸ்லீம் லீக், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி போன்ற கட்சிகள் இருந்தன. நடைபெறவுள்ள 2026 சட்டப்பேரவைத் தேர்தலில், திமுக கூட்டணியில் தேமுதிக, மக்கள் நீதி மய்யம் உள்ளிட்ட சில புதிய கட்சிகள் இணைந்துள்ளன. கடந்த தேர்தலில் துவங்கி கடந்த மாதம் வரையிலும் கூட்டணியில் இருந்த தமிழக வாழ்வுரிமைக் கட்சி கூட்டணியை விட்டு வெளியேறி, தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று அறிவித்துள்ளது.

மக்கள் நீதி மய்யமும் இந்தத் தேர்தலில் போட்டியிடாமல் திமுகவை ஆதரிப்பதாக அக்கட்சியின் தலைவர் கமல் தெரிவித்துள்ளார்.

இவ்விரு கட்சிகளைத் தவிர, கடந்த 10 ஆண்டுகளாக திமுக கூட்டணியில் இருந்து வரும் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள், மதிமுக மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிகளுக்கு தொகுதிகள் பங்கிடப்பட்டுள்ளன.

கம்யூனிஸ்ட் கட்சிகள் தலா 6 –8 என்ற எண்ணிக்கையிலும், விடுதலைச் சிறுத்தைகள் இரட்டை இலக்கத்திலும் தொகுதிகளை எதிர்பார்த்திருந்த நிலையில், சென்ற தேர்தலை விட கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தலா ஒரு தொகுதியும், மதிமுகவுக்கு 2 தொகுதிகளும் குறைக்கப்பட்டுள்ளன.

விடுதலைச் சிறுத்தைகளுக்கு 2 தொகுதிகள் அதிகமாகத் தரப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சிக்கும் கூடுதலாக 3 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்திய யூனியன் முஸ்லீம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி ஆகிய கட்சிகளுக்கு தலா இரு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், முஸ்லீம் லீக் தவிர பிற கட்சிகள் உதயசூ ரியன் சின்னத்தில் போட்டியிடுமென்று தெரிய ள்ளது.

பத்தாண்டுகளுக்கும் மேலாக திமுக கூட்டணியில் இருந்த இந்த கட்சிகளுக்கு, கேட்டதை விடவும், சில கட்சிகளுக்கு முந்தைய தேர்தலை விடவும் குறைவான தொகுதிகள் தரப்பட்டுள்ளன. ஆனால் சமீபத்தில் திமுக கூட்டணியில் இணைந்துள்ள தேமுதிகவிற்கு, ஏற்கெனவே ஒரு மாநிலங்களவை இடம் தரப்பட்டுள்ள நிலையில், தற்போது 10 சட்டமன்றத் தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

எதன் அடிப்படையில் தேமுதிகவுக்கு 10 தொகுதிகளை திமுக தலைமை ஒதுக்கியது என்பது யாருக்குமே புரியாத புதிர் என்கிறார் மூத்த பத்திரிக்கையாளர் ஆர்.கே. ராதா கிருஷ்ணன். ஏற்கெனவே மாநிலங்களவை இடத்தை ஒதுக்கிய நிலையில், இப்போது 10 தொகுதிகளை தேமுதிகவுக்கு ஒதுக்கியதன் பின்னணியில், தேமுதிகவுக்கு நெருக்கமான யாரோ ஒருவர், திமுக தலைமையை தவறாக வழி நடத்தியதாகவே தோன்றுகிறது என்றார் அவர்.



பிபிசி தமிழிடம் பேசிய ஆர்.கே. ராதா கிருஷ்ணன், ``இதை யார் செய்திருந்தாலும் திமுகவுக்கும், கூட்டணிக்கும் செய்யக்கூடிய துரோகமாகத்தான் இதைப் பார்க்க வேண்டியுள்ளது. காங்கிரஸ் கட்சி வெளியே போய் விடுமென்ற நிலை இருந்த போது, தேமுதிகவுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இவ்விரு விஷயங்களையும் திமுக தலைமை ஏற்றுக் கொண்டு, அதை மறுக்க முடியாமல் இப்படிச் செய்திருக்கிறதோ என்றும் சந்தேகம் எழுகிறது. என்றார்.

இந்தத் தேர்தலில் அதிகபட்ச பலனடைந்த கட்சிகள் என்று பட்டியலிட்டால் முதலில் தேமுதிகவும், இரண்டாவது அமமுகவும் இடம் பெறும். இரு கட்சிகளுக்கும் 2 சதவீதத்துக்கும் குறைவான வாக்குவங்கியே இருக்கும் நிலையில் இந்த கட்சிகளுக்கு எதிரெதிர் கூட்டணிகளில் 10, 11 என்று தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதிக இழப்பு என்று பார்த்தால் அது திமுகவுக்குதான். அதனுடன் நீண்டகாலமாக பயணிக்கும் பிற கூட்டணிக் கட்சிகளுக்கும் தான் இது இழப்பு. அது தேர்தல் முடிவில் தெரியவரும்.``

விடுதலைச் சிறுத்தைகளை விட தேமுதிக பெரிய கட்சியில்லை என்று கூறும் ராதாகிருஷ்ணன், தேமுதிகவுக்குக் கொடுத்த 10 தொகுதிகளை அக்கட்சிக்குக் கொடுத்திருந்தால் அது திமுகவுக்கே சாதகமாக அமைந்திருக்கும் என்றார். பிற கட்சிகளுக்கு சீட்டைக் குறைத்து, அதை தேமுதிகவுக்கு கொடுத்ததில் தொகுதி பங்கீட்டில் ஸ்டாலின் தோற்றிருக்கிறார். அதேநேரத்தில் பாஜகவுக்கு காங்கிரசை விட ஒரு தொகுதியைக் குறைத்ததில் எடப் பாடி பழனிசாமி வென்றிருக்கிறார்`` என்றார் அவர்.

திமுக கூட்டணியில் பல்வேறு கட்சிகளுக்கும் தொகுதிகளைக் குறைத்த நிலையில், இந்த தேர்தலில் போட்டியிடாமல் ஆதரிப்பதாக மக்கள் நீதி மய்யத் தலைவர் கமல் அறிவித்ததும் பேசுபொருளாகியுள்ளது. .

கமல் செய்தது தியாகம், அதற்கு எப்படி நன்றி கூறுவதென்றே தெரியவில்லை என்று முதல்வர் ஸ்டாலின் பதிவிட்டிருந்தார். அதற்கு `இது தியாகமில்லை, கடமை' என்று கமல் கூறியிருந்தார். பாஜகவை தமிழகத்தில் காலூன்ற அனுமதிக்கக்கூடாது என்பதற்காகவே, தொகுதிகள் குறைவாக இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்வதாக விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல் திருமாவளவன், கம்யூ னிஸ்ட் கட்சித் தலைவர்கள் முத்தரசன், வீரபாண்டியன் ஆகியோர் கருத்து கூறியிருந்தனர்.

அதே கருத்தையே வேறு விதமாகத் தெரிவித்துள்ள கமல், ``தமிழ்நாட்டின் உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டு, தமிழ் மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டு வரும் ஒரு நெருக்கடியான சூழலில், `எங்கே எங்கள் பங்கு' என்று கேட்பது நல்ல சகோதரனின் அடையாளமாக இருக்க முடியாது. இது தியாகம் அல்ல கடமை. சுய நலம் அல்ல பொறுமை.' என்று தனது அறிக்கையில் கூறியிருந்தார்.

இன்றிருக்கும் இக்கட்டான அரசியல் சூழலில், நமக்குத் தருவதாகச் சொல்லியிருக்கும் தொகுதி எண்ணிக்கையும், உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்ற பரிந்துரையும், மக்கள் நீதி மய்யத்தின் உறுப்பினர்களுக்கும் எனக்கும் ஏற்புடையதாக இல்லை. அவர்களது தரப்பில் அதற்கான நியாயம் இருக்கிறது என்பதை நான் முழுமையாகப் புரிந்து கொள்கிறேன் என்றும் கமல் தெரிவித்திருந்தார்.

தேமுதிகவுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்ட நிலையில், மக்கள் நீதி மய்யத்துக்கு 2 தொகுதிகளை ஒதுக்கியதால், அதை ஏற்றுக்கொண்டு தேர்தலில் போட்டியிடுவது கௌரவக் குறைச்சலாக இருக்குமென்று கருதி கமல் இந்த முடிவை எடுத்திருக்கலாம் என்கிறார் பத்திரிக்கையாளர் ராதாகிருஷ்ணன்.

ஆனால் இந்த முடிவை அவருடைய கட்சியினர் எப்படி பார்ப்பார்கள் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டுமென்றார் அவர். கமலின் முடிவை அதிமுக கடுமையாக விமர்சித்துள்ளது. அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் சத்யன், தனது எக்ஸ் பதிவில், ``இன்று கமல், நாளை விஜய். நடிகர்கள் வெள்ளித்திரையில் கேமரா முன் வசனம் பேசி அசத்துகிறார்கள், ஆனால் பொது வாழ்வில் நிஜ வாழ்க்கைச் செயல் என்று வரும் போது அவர்கள் பெரிய பூஜ்யம்தான். இதில் பரப்புரைக்காக எம்ஜிஆர், ஜெயலலிதாவை இழுக்க வேண்டாம்.' என்று கூறியிருக்கிறார்.

கமலின் இந்த முடிவு குறித்து, மக்கள் நீதி மய்யத்தின் மாநில இளைஞரணி செயலாளர் கவிஞர் சிநேகனிடம் பிபிசி தமிழ் பேசிய போது, ``தலைவர் ஏன் இப்படியொரு முடிவை எடுத்தார் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. அவருடைய இந்த முடிவால் நாங்கள் பெரும் குழப்பத்தில் இருக்கிறோம். எதையும் இப்போது பேசுகிற மன நிலையில் இல்லை. ஓரிரு நாட்கள் கழித்தே, எதையும் தெளிவாகப் பேச முடியும்.`` என்றார்.

திமுக, அதிமுக இரு கூட்டணிகளிலும் தொகுதிகள் மற்றும் சின்னங்கள் ஒதுக்கீட்டில் சில தவறுகள் நடந்திருப்பதாகக் கூறும் பத்திரிக்கையாளர் ராதாகிருஷ்ணன், இது தேர்தல் பணிகளிலும், முடிவுகளிலும் கண்டிப்பாக எதிரொலிக்கும் என்கிறார்.

உதாரணமாக ``அதிமுக கூட்டணி தாமரை சின்னத்தில் போட்டியிடுவது, திமுகவுக்கு சாதகமாக இருக்கும்`` என்கிறார் அவர்.

அந்த கட்சிகள் இரட்டை இலைச் சின்னத்தில் நின்றிருந்தால் போட்டி கடுமையாக இருந்திருக்கும். சில இடங்களில் வெற்றியும் பெற்றிருக்கலாம். தாமரை சின்னத்தில் போட்டியிடுவது வெற்றி வாய்ப்பைக் குறைக்கும். அத்தகைய தொகுதிகளில் திமுக நேரடியாக களமிறங்க வாய்ப்புள்ளது.


அதேபோன்று காங்கிரஸ் போட்டியிடும் தொகுதிகளில் அதிமுக நேரடியாக போட்டியிடவும் வாய்ப்பு அதிகம். கூட்டணிக்கு தலைமை வகிக்கும் திராவிடக் கட்சிகளுடன் ஒட்டாமலிருக்கும் தேசியக்கட்சிக்காக தேர்தல் பணி செய்ய கீழ்நிலை தொண்டர்களுக்கு உடன்பாடு இருக்காது. அது தேர்தல் பணிகளில் எதிரொலிக்கும்.`` என்றார் ராதா கிருஷ்ணன்.

தேமுதிகவுக்கு 10 தொகுதிகளை ஒதுக்கியதில், கூட்டணிக்கட்சிகளுக்கு வருத்தமிருந்தாலும் அது எதுவும் தேர்தல் பணியில் எதிரொலிக்காது என்கிறார் திமுக வர்த்தக அணி மாநில செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம்.

பிபிசி தமிழிடம் பேசிய காசிமுத்து மாணிக்கம், ``ஒரு தேர்தலில் ஒரு கட்சி பின்னடைவை சந்தித்ததை வைத்து, அக்கட்சியின் அடித்தளத்தை குறைத்து மதிப்பிட முடியாது. கடந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலில், மிகக்குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது, விஜய பிரபாகரன் மட்டும் தான். அதிலும் 2 சட்டமன்றத் தொகுதிகளில் தேமுதிக முதலிடம் பிடித்திருந்தது. இக்கட்டானசூழலில் திமுகவை நம்பி வந்த தேமுதிகவை அங்கீகரிக்கவே, வாக்கு மாறாமல் எங்கள் தலைவர் இந்த இடங்களைக் கொடுத்துள்ளார்.`` என்றார்.

இதுபோன்று கூட்டணிகளில் தொகுதி பங்கீட்டில் ஏற்படும் மனக்கசப்புகள் எப்போதும் தேர்தல் பணியில் எதிரொலிக்காது என்கிறார் பத்திரிக்கையாளர் குபேந்திரன். திமுக, அதிமுக ஆகிய இரு கூட்டணிகளிலும் இந்த அதிருப்தி, பல கட்சிகளுக்கு இருந்தாலும் தேர்தல் பணிகள் என்று வரும்போது அதை யாரும் வெளிக்காண்பிக்க வாய்ப்பில்லை என்கிறார் அவர்.

# பிரம்டன் தமிழின அழிப்பு நினைவகம் மீண்டும் சிதைப்பு! ஒன்றாறியோ மாநில அமைச்சர் விஜய் தணிகாசலம் கடும் கண்டனம்




பிரம்டனில் அமைந்துள்ள தமிழின அழிப்பு நினைவகம் மீண்டும் ஒரு முறை விசமிகளால் சிதைக்கப்பட்டிருக்கும் செயலுக்கு ஒன்றாறியோ மாநில அமைச்சரும், ஸ்காபரோ ரூஜ் பார்க் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான விஜய் தணிகாசலம் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

கனடியத் தமிழ் சமூகத்தின் உணர்வுகளுடன் கலந்த இந்த நினைவகம் சேதப்படுத்தப்பட்டிருப்பது ஒட்டு மொத்தத் தமிழ் மக்களையும் மிகுந்த அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளாக்கியுள்ளது. இச்சம்பவம் குறித்து அமைச்சர் விஜய் தணிகாசலம் வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

பிரம்டனில் அமைந்துள்ள தமிழின அழிப்பு நினைவகம் சிதைக்கப்பட்டிருப்பது எனக்கு மிகுந்த அருவருப்பையும் மனவேதனையையும் அளிக்கிறது. உயிரிழந்த பல்லாயிரக் கணக்கானோரை நினைவுகூரும் ஒரு புனிதமான இடமாகவும், கனடாவைப் புலம் பெயர் தேசமாகக் கொண்ட தமிழின அழிப்பிலிருந்து தப்பிப்பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் ஆற்றுப்படுத்துதலுக்குரிய ஓர் அடிப்படை அடையாளமாகவும் இந்நினைவகம் திகழ்கிறது.

ஒன்றாறியோ மாநில சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், தெற்காசியாவிற்கு வெளியே மிகப் பெரிய அளவில் துடிப்புடனும் மீளெழும் திறனுடனும் வாழும் தமிழ்ச் சமூகத்தை நான் பிரதிநிதித்துவப்படுத்துகிறேன். எனது தொகுதி மக்களுக்கும், ஒன்றாறியோ முழுவதும் வாழும் இலட்சக்கணக்கான தமிழர்களுக்கும், நடைபெற்றுள்ள இவ்வருவெருக்கத் தக்க செயலானது கனடியத் தமிழ் சமூகத்தின் அடையாளம் மற்றும் வரலாற்றின் மீதான நேரடித் தாக்குதலாகும். வெறுப்புணர்வுக்கும், இனவழிப்பு மறுப்புக்கும் ஒன்றாறியோவில் இடமில்லை. தமிழ் வரலாற்றைப் பாதுகாப்பதிலும், தமது உறவுகளை நினைவுகூருவதற்கும் துயரைப் பகிர்வதற்குமான தமிழ் மக்களின் பிரிக்க முடியாத உரிமையை மதிப்பளிப்பதிலும் நாங்கள் என்றும் உறுதியாக நிற்போம்' என்றார்.

அமைச்சரின் இந்நிலைப்பாட்டைத் தொடர்ந்து, கனடியத் தமிழர் தேசிய அவை போன்ற அமைப்புகளும் இந்த வன்முறைச் செயலைக் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. இச்சிதைப்பு நடவடிக்கை என்பது ஒரு தனிமைப்படுத்தப்பட்ட சம்பவம் அல்ல எனவும், இது தமிழின அழிப்பை மறுக்கும் ஒரு திட்டமிட்ட செயற்பாடு எனவும் கனடியத் தமிழர் தேசிய அவை சுட்டிக்காட்டியுள்ளது. இச்சம்பவம் குறித்து பீல் பிராந்திய பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி, கண்காணிப்பு கருவியின் ஆதாரங்களின் அடிப்படையில் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் எனவும் அவ்வமைப்பு வலியுறுத்தியுள்ளது.

## யாருடன் நெருக்கம் என்பதை இலங்கை முடிவு செய்ய வேண்டும்



மத்திய கிழக்கு பிராந்தியத்தில் மோதல்கள் தீவிரமடைந்து வரும் நிலையில், இலங்கை தனது சர்வதேச நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் இருப்பதாக இந்தியாவுக்கான இஸ்ரேலிய தூதுவர் ரூவன் அசார் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் இந்திய தூதுவராக உள்ள அவர், இலங்கை தனது வெளிநாட்டு கொள்கையில் யாருடன் நெருக்கமாக செயல்படுகிறது என்பதை தெளிவாக நிர்ணயிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். நாடுகள் தங்களின் நண்பர்கள் யார் என்பதை தெளிவாக தீர்மானிக்க வேண்டிய காலகட்டம் இது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மத்திய கிழக்கில் நிலவி வரும் பதற்றமான சூழ்நிலையில் பல நாடுகள் தங்களின் அரசியல் மற்றும் இராஜதந்திர நிலைப்பாடுகளை மறுபரிசீலனை செய்து வருகின்றன. இந்நிலையில் இலங்கையின் நிலைப்பாடு குறித்தும் சர்வதேச மட்டத்தில் கவனம் செலுத்தப்படுகிறது.

மேலும் பிராந்திய மற்றும் உலகளாவிய அரசியல் மாற்றங்கள் வேகமாக இடம்பெற்று வரும் சூழலில், சிறிய மற்றும் நடுத்தர நாடுகள் தங்களின் வெளியுறவு கொள்கைகளை மிகுந்த கவனத்துடன் முன்னெடுக்க வேண்டிய அவசியம் இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



# துணைவேந்தர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றார் பேராசிரியர் சிறிசற்குணராஜா

யாழ்ப்பாணப் பலகலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியில் இருந்து பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா, 24 மார்ச் 2026 ஓய்வு பெற்றுள்ளார்.

2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி முதல் 2023 ஆகஸ்ட் 28 வரை தனது முதலாவது பதவிக் காலத்தையும், 2023 ஆகஸ்ட் முதல் இன்று 2026 மார்ச் 24 வரை இரண்டாவது பதவிக் காலத்தி லும் துணைவேந்தராகப் பதவி வகித்த பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா தனது 65 ஆவது அகவையை நிறைவு செய்து 66 ஆவது அகவை க்குள் காலடி பதிக்கிறார்.

எதிர்வரும் ஆகஸ்ட் 28 திகதி வரை ஜனாதிபதி யினால் இவருக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்த போதிலும், பல்கலைக்கழக சட்டத்தின்படி 65 வயதை நிறைவு செய்த பின்னர் நிர்வாகப் பதவிகளை வகிப்பத ற்கு இடமளிக்காததன் காரணமாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் தானாகக் கேட்டு, அடுத்த துணைவேந்தருக்கான தெரிவை உரிய காலத்தினுள் நடாத்தி, புதிய துணைவேந்தரிடம் பதவியை கையளித்தார்.



எனினும், பல்கலைக்கழகச் சட்ட ஏற்பாடுகளின் படி அவர் பணியாற்றும் விஞ்ஞான பீடத்தின் நடப்புக் கல்வியாண்டு நிறைவு பெறும் – எதிர்வரும் செப்ரெம்பர் 30 வரை அவர் தனது கல்விப் பணியில் தொடர்ந்தும் கணிதவியல் பேராசிரியராகச் சேவை யாற்றுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரான்ஸில் துணைமேயரானார் தமிழ்ப்பெண் ஆதித்யா ஆனந்தராஜா



இலங்கையின் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட தமிழ்ப் பெண்ணான ஆதித்யா ஆனந்த ராசா பிரான்ஸின் பொன்டால்ட்-கொம்பால்ட் நகரின் துணை மேயராக பொறுப்பேற்றுக்கொண்டார்.

பிரான்ஸ் நாட்டின் பொன்டால்ட்-கொம்பால்ட் நகரில் நடைபெற்ற நகராட்சி தேர்தலைத் தொட ர்ந்து இலங்கை பூர்வீகத்தைக் கொண்ட ஆதித்யா ஆனந்தராசா துணை மேயராக தனது பதவிப் பொறுப்புகளை 23 மார்ச் 2026 திங்கட்கிழமை அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை பகுதியைச் சேர்ந்த இவரின் இந்த வளர்ச்சி வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு பெருமையை ஏற்படுத்தும் முக்கிய நிகழ்வாக பார்க்கப்படுகிறது.

இளம் வயதிலேயே அரசியலில் ஆர்வம் கொண்ட ஆதித்யா ஆனந்தராசா 19 வயதிலேயே நகர மன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்தவர். தொடர்ந்து பொதுச் சேவையில் ஈடுபட்டு மக்களுடன் நெரு க்கமாக செயல்பட்டதன் பலனாக தனது 25 ஆவது வயதில் துணை மேயர் பதவியை அடைந் துள்ளார்.

அவரது இந்த முன்னேற்றம் இளம் தலைமுறை யினருக்கு அரசியல் மற்றும் பொதுச் சேவையில் ஈடுபட ஊக்கமளிக்கும் சிறந்த முன்னுதாரணமாகக் கருதப்படுகிறது. மேலும் பல்துறை சமூகத்துடன் இணைந்து செயல்படுவதிலும் உள்ளூர் நிர்வாக த்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதிலும் அவர் முக்கிய பங்காற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இலங்கைக்கு மேலதிகமாக 100 மில்லியன் டொலர்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இந்த ஆண்டி ற்காக இலங்கைக்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த 380 மில்லியன் டொலர் நிதியுதவியை 480 மில்லியன் டொலராக அதிகரிப்பதற்கும், நிலவும் சூழ்நிலை யைக் கருத்திற் கொண்டு அதில் 200 மில்லியன் டொலரை உடனடியாக இலங்கைக்கு வழங்குவதற் கும் ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரி வித்துள்ளது.

இலங்கைக்கு சென்றுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசாட்சுகு அசகாவா உள்ளி ட்ட பிரதிநிதிகள் குழுவினர், 23 மார்ச் 2026 ஜனாதி பதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவைச் சந்தித்த போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி எவ் வாறான ஒத்துழைப்புகளை வழங்க முடியும் என்பது குறித்து இச்சந்திப்பில் விரிவாகக் கலந் துரையாடப்பட்டது. டித்வா அனர்த்தத்திற்குப் பின்னர் நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆதரவை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

அனர்த்தத்திற்குப் பிந்தைய நிலைமை மற்றும் தற்போதைய மத்திய கிழக்கு போர்ச் சூழலுக்கு மத்தியிலும் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்காக அரசாங்கம் முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களை ஆசிய அபிவிருத்தி வங்கி யின் தலைவர் பாராட்டினார்.

டித்வா புயலினால் சேதமடைந்த உட்கட்டமைப்பு வசதிகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்குத்



தேவையான எந்தவொரு உதவியையும் வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். மத்திய மலைநாட்டின் நீர் நிலைகளைப் பாதுகாப்ப தன் மூலம் மீண்டும் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப் பட வேண்டிய திட்டங்களுக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும் வங்கித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சார்பில் தெற்காசிய பிராந்திய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சோனா சிரேஸ்தா உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகளும், இலங்கை அரசாங்கத்தின் சார்பில் தொழிலாளர் அமைச்சர் மற்றும் பொருளா தார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செய லாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# போர்ப் பங்காளிகளுக்கு இடையில் தோன்றும் முரண்பாடுகள்

மூன்று வாரங்களுக்கு முன்னர் ஈரானுக்கு எதிராகப் போரைத் தொடங்கிய போது அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் முதல் இலக்கு ஒன்றாகவே இருந் தது. ஆனால், ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படு த்துவதுஎன்ற அந்த இலக்கை இதுவரையில் சாதிக்க இயலாமல் போன நிலையில் போரைத் தொடருவதற்கான தங்கள் தரப்பு நோக்கங்களைப் பொறுத்தவரை, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவுக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன.

'காவியக் கோபம்' (Epic Fury) என்ற பெயரில் இரு நாடுகளும் ஈரானுக்கு எதிராகத் தொடுத்த போர் தற்போது உலகளாவிய ரீதியில் ட்ரம்புக்கும் நெத்தன்யாகுவுக்கும் எதிரான சீற்றமாக மாறியிரு க்கிறது.

மிதமான பொருளாதாரப் பாதிப்புடன் ஈரானுக்கு எதிராக விரைவான இராணுவ வெற்றியைப் பெற்று விட முடியும் என்று நம்பிய ட்ரம்ப் 'மீசையில் மண் படாமல் எவ்வாறு போர் நெருக்கடியில் இருந்து விடுபடுவது என்று யோசிக்கிறார் என்பது உண்மை.

அதேவேளை அமெரிக்காவுடன் சேர்ந்து ஈரானைத் துவம்சம் செய்வதற்கு கிடைத்த வாய்ப்பை இறுதிவரை தனக்கு அனுகூலமான முறையில் பயன்படுத்துவதில் நெதான்யாகு குறியாக இருக்கி றார் என்பதும் உண்மை.

ஈரானிடமிருந்து அமெரிக்காவுக்கு உடனடி ஆபத்து இருந்ததில்லை என்றும் இஸ்ரேலிட மிருந்தும் அதற்கு ஆதரவான செல்வாக்குமிக்க அமெரிக்க யூதக் குழுக்களிடமிருந்தும் வந்த நெருக்குதலின் விளைவாகவே அமெரிக்கா இன்னொரு மத்திய கிழக்குப் போருக்குள் இழுத்து விடப்பட்டிருக்கிறது என்றும் கூறி அமெரிக்க தேசிய பயங்கரவாத எதிர்ப்பு நிலைய த்தின் பணிப்பாளர் ஜோ கென்ற் பதவி விலகியதை யடுத்து போருக்கு எதிரான உணர்வுகள் அமெரிக் கர்கள் மத்தியில் கடுமையாக அதிகரிக்கத் தொட ங்கியிருக்கிறது.

இதற்கிடையில், ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாமல் போன விரக்தியில் நெதான் யாகு ஈரானின் எண்ணெய் வளங்களை அழிப்பதில் தீவிரம் காட்டத் தொடங்கியிருக்கிறார்.

உலகிலேயே மிகவும் பெரிய இயற்கை வாயுப் படிவு என்று கூறப்படுகின்ற ஈரானின் சவுத் பார்ஸ் வாயு வயல் மீது இஸ்ரேல் கடந்த புதன்கிழமை இஸ்ரேலியப் போர் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதல்களை ட்ரம்ப் கடுமையாகக் கண்டனம் செய்திருக்கிறார்.

அந்த இயற்கைவாயு வயலை ஈரான் வளைகுடா வில் மிகப்பெரிய அமெரிக்க இராணுவத் தளத்தைக் கொண்டிருக்கும் கட்டார் நாட்டுடன் பகிர்ந்து கொள்கிறது. ஏற்கெனவே ஈரானின் சரமாரியான ஏவுகணைத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டிரு க்கும் வளைகுடா அரபு நாடுகள் மத்தியில் தனக்கு எதிரான உணர்வுகள் அதிகரிப்பதற்கு இந்த தாக்கு தல்கள் வழி வகுக்கும் என்று ட்ரம்ப் விசன மடைந்திருக்கிறார் போன்று தெரிகிறது.

அமெரிக்காவின் வழிகாட்டலில் தான் இஸ்ரேல் ஈரானுக்கு எதிரான போரில் ஈடுபட்டிருக்கின்றது என்றில்லாமல் இஸ்ரேலின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரமே அமெரிக்கா போரில் ஈடுபட நிர்ப்பந்தி க்கப்படுகிறது என்ற ஒரு தோற்றப்பாடு வந்து விட்டது.

ஈரானின் இராணுவ மற்றும் பொருளாதாரக் கட்ட மைப்புக்களை நிர்மூலம் செய்வதுடன் ஆயிரக் கணக்கில் அந்த நாட்டு மக்களை அமெரிக்காவும் இஸ்ரேலும் கொன்றொழிக்கின்ற போதிலும் ஈரானிய அரசாங்கம் எவரும் எதிர்பாராத வகையில் உறுதிப் பாட்டுடன் எதிர்த்து நின்று பதிலடி கொடுக்கிறது.

ஆரம்பக்கட்ட இலக்கை அடையமுடியாத நிலை யில் போரைத் தொடரும் போது வெவ்வேறு நோக்கங்களைக் கொண்ட போர்ப் பங்காளிகள் மத்தியில் மேலும் முரண்பாடுகள் வளருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இறுதியில் அதுவே போரை முடிவுக்குக் கொண் வர இருவரையும் தவிர்க்க முடியாமல் நிர்ப்பந்திக்கலாம்.

# போதைப்பொருள் விநியோகம் செய்யும் 29 முக்கிய புள்ளிகள் கைது!

## பெண் போதைப்பொருள் கடத்தல்காரரின் 300 மில்லியன் ரூபா பறிமுதல்




இலங்கைக்கு போதைப்பொருள் விநியோகம் செய்யும் 29 முக்கிய போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இதுவரை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வடகல தெரிவித்துள்ளார்.

திருகோணமலை பகுதியில் நடைபெற்ற முழு நாடுமே ஒன்றாக தேசிய செயற்பாட்டுத் திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கறுப்பு வணிகத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று விநியோக வலைப்பின்னல், மற்றொன்று தேவை.

திருகோணமலை துறைமுகத்திற்கு படகு மூலம் கொண்டு வரப்படும் போதைப்பொருளை இங்குள்ள இளைஞர்கள் பயன்படுத்துகின்றனர். எனவே, இந்தத் தேவையை இல்லாது செய்ய நாம் தீர்மானித்தோம். இதற்கு முந்தைய அரசாங்கங்கள் இந்த விநியோக வலைப்பின்னலில் கை வைக்கவில்லை. ஆனால் தற்போதைய அரசாங்கம் விநியோகச் சங்கிலியின் மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளவர்களைக் குறிவைக்கத் தீர்மானித்தது.

இந்தச் சங்கிலித் தொடர் கடற்கரையுடனோ அல்லது விமான நிலையத்துடனோ நின்றுவிடக் கூடாது. குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் இந்தோனேசியா, நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்குச் சென்று இதுவரை 29 முக்கிய விநியோகஸ்தர்களைக் கைது செய்துள்ளனர்.

குறிப்பாக இந்தோனேசியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட குற்றவாளிகள் வாக்குமூலம் அளித்து வருகின்றனர். இதனால் சிலர் கலக்கமடைந்துள்ளனர்.

இது இலகுவாகப் பணம் சம்பாதிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு வணிகம். இதில் மூன்று வணிகங்கள் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதை நாம் அறிவோம்.

போதைப்பொருளுடன் தொடர்புடைய பாதாள உலகம் உள்ளது. பாதாள உலகத்துடன் தொடர்புடைய சட்டவிரோத ஆயுதக் கடத்தல் உள்ளது. போதைப்பொருள், பாதாள உலகம் மற்றும் சட்டவிரோத ஆயுதங்கள் என இந்த ஒட்டுமொத்தக் கறுப்பு வணிகமும் நாட்டை ஆக்கிரமித்துள்ளது.

அரசியல் அதிகாரத்தின் பின்னணியில் தான் இது வளர்ந்தது. தியவன்னாவே இதனைப் போஷித்தது. தங்களது தேர்தல் பிரச்சாரங்களை இந்தக் கறுப்பு வணிகத்தின் மூலம் வரும் பணத்தைக் கொண்டே அவர்கள் முன்னெடுத்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட பெண் சந்தேகநபர் ஒருவருக்குச் சொந்தமான 300 மில்லியன் ரூபாவிற்கும் அதிக பெறுமதியுடைய சொத்துக்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

போதைப்பொருள் வர்த்தகத்தினால் ஈட்டப்பட்ட வருமானத்தில் இந்தச் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது

அதற்கமைய கொழும்பு -14 மற்றும் ஜா-எல பகுதிகளில் அமைந்துள்ள 514 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய காணி, 4 கடை அறைகள், மூன்று மாடி வீடு மற்றும் 59 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய 6 வங்கி கணக்குகள் ஆகியவற்றை, பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் முடக்குவதற்கான உத்தரவுகளை நீர்கொழும்பு மற்றும் கொழும்பு மேல் நீதிமன்றங்கள் நீடித்து அமுல்படுத்தியுள்ளன.

விசாரணைகளின் போது, வெல்லம் பிட்டி பகுதியில் 30 மில்லியன் ரூபா பெறுமதியான மற்றுமொரு சொகுசு வீடும் கண்டறியப்பட்ட நிலையில் அதனை மார்ச் 20 ஆம் திகதி முதல் 7 நாட்களுக்கு முடக்குவதற்கும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க யாழ்ப்பாணத்தில், ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த இளைஞர் ஒருவர் 22 மார்ச் 2026 சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது அவரிடமிருந்து 2 கிராம் 600 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞரே, நல்லூரடி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் குறித்த சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



Vivekananthan Sasitharan
*Barrister, Solicitor & Notary Public*



Rajabalini Sasitharan
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

ஈரானியர்கள் தங்கள் அரசாங்கத்தைக் கவிழ்த்து ஆட்சியை எடுத்துக் கொள்ள வேண்டும். இது பல தலைமுறைகளுக்கு உங்களுக்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று ஈரானிய மக்களின் விடிவுக்காகவே தாம் போரை தொடங்கப் போவதாக கருத்துப்பட தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பெப்ரவரி 28ம் திகதி ஈரான் மீதான போரை ஆரம்பித்தார்.

ஈரானின் அணு ஆயுதத்திறன் அதன் என்று கேட்டபோது – நீங்கள் இரண்டையும் சொல்ல முடியும் என்று பதலளித்தபோது செய்தியாளர்கள் தங்கள் புருவங்களை உயர்த்திக் கொண்டனர்.

மார்ச் மாதம் 13ம் திகதி ஒரு நேர் காணலில் போர் தனது எலும்புகளில் உணரும்போது முடிவடையும் என்று குதர்க்கமாகப் பதிலளித்தார். மார்ச் மாதம் 17ம் திகதி ,வர் முற்றிலும் எதிர்பார்த்திராத ஓர் அதிர்ச்சிச் சம்பவம் இடம்பெற்றது. அமெரிக்காவின் நோக்கங்களை அடைவதற்கு மிக நெருக்கமாக இருப்பதாகச் சொன்னார். எனினும், போர் நிறுத்தம் செய்ய விரும்பவில்லையென்று தெரிவித்துக் கொண்டார்.

ஈரான் தலைநகரான டெ஁ரானிலுள்ள பாலிஸ்ரிக் ஏவுகணைகளை அச்சுறுத்தல் என்று விபரித்து அதனை முடிவுக்குக் கொண்டு வருவதற்கே போரை ஆரம்பித்ததாக கூறிய ட்ரம்ப், மூன்று வார பேரழிவுகளின் பின்னர் மெதுவாக போர் நிறுத்தத்துக்கு செல்லும் நிலை

# ஈரானிய மக்களின் ஒற்றுமையில் ட்ரம்ப் கற்றுக் கொள்ளும் பாடமும் இலங்கையின் அணிசேரா நிலையும்!

அணுசக்தித் திட்டத்துக்கானது என்று கூறிய ட்ரம்ப், தாம் ஆரம்பிக்கப் போகும் போர் நான்கு அல்லது ஐந்து வாரங்கள் நீடிக்கலாம் எனவும் தெரிவித்திருந்தார். தமது எண்ணத்தை ஈடேற்றுவதற்காக, ஐரோப்பாவில் தமது நல்ல நண்பர்களை ஈரானின் நீண்ட தூர ஏவுகணைகள் அச்சுறுத்தக் கூடும் எனவும் முன்னெச்சரிக்கை விடுத்திருந்தார்.

அமெரிக்காவிடம் வரம்பற்ற ஆயுதங்கள் இருப்பதாகவும், போரை என்றென்றும் வெற்றிகரமாக நடத்த முடியுமென்றும் மூன்று நாட்களின் பின்னர்



(மார்ச் 2ம் திகதி) கூறினார். ஆனால், அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் மார்கோ றுாபியோ போர் பற்றிக் குறிப்பிடுகையில், இஸ்ரேலின் உறுதிப்பாடு ஈரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்காவை நிர்ப்பந்தித்தது என்று புதியதொரு தகவலை தெரிவித்தார்.

ஈரானிடம் இருக்கும் தாக்குதல் ஏவுகணைகளை அழிப்பது, அதன் ஏவுகணை உற்பத்தியை நிர்மூலம் ஆக்குவது, கடற்படை மற்றும் பாதுகாப்பு உட்கட்டமைப்பை தகர்ப்பது அதன் மீதான தாக்குதலின் நோக்கமென மார்ச் 4ம் திகதி பென்டகன் தலைவர் பீற் ஹெக்செத் ஊடகங்களுக்குக் கூறினார்.

இதன் இரண்டு நாட்களின் பின்னர் போர் நிலைமை பற்றி கூறிய ட்ரம்ப், நிபந்தனையற்ற சரணடைவதைத் தவிர ஈரானுக்கு வேறுவழி இருக்காது என்று போர் வெற்றிப்பாணி போன்று அறிவித்தார். இதற்கு மூன்று நாட்களின் பின்னர், இது வெறும் ஆரம்பம் மட்டுமே என்று கூறிவிட்டு ஒரு நாள் கழித்து போர் மிகவும் முழுமையானது என்று தாம் நினைப்பதாகத் தெரிவித்தார். இதற்கு மறுநாள், நாங்கள் ஏற்கனவே பல வழிகளால் வெற்றி பெற்றுள்ளோம், ஆனால் போதுமான அளவு வெற்றி பெறவில்லையென்று அளவைக் கணக்கில் அறிவித்தார். அதே நாளன்று செய்தியாளர்கள் இவரிடம் போர் தொடங்குகிறதா அல்லது முடிந்து விட்டதா

தேசிய பயங்கரவாத மையத்தின் இயக்குனர் ஜோசெப் கென்ட் முன்னறிவிப்பு ஏதுமின்றி அதிரடியாக தமது பதிவை ராஜினாமா செய்து முழு உலகுக்கும் போர் பற்றிய மறுபக்கச் செய்தியை வெளிப்படுத்தினார்.

ஈரானில் நடந்துவரும் போரை நான் நல்ல மனச்சாட்சியுடன் ஆதரிக்க முடியாது' என்ற இவரது பதவி விலகல் தொடர்பான அறிவிப்பு ட்ரம்பை அதிர்ச்சிக்குள்ளாக்கி நிலைகுலையச் செய்ததாயினும் அதனை அவர் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

ஈரான் மீது அமெரிக்கா போர் புரிந்து கொண்டிருக்கையில் அதனை ஆதரிக்க மேற்கு நாடுகள் ஆர்வம் காட்டவில்லை. பல வெளிநாடுகளின் ஆதரவை ட்ரம்ப் நாடிய போதும் அவருக்குச் சாதகமான சமிக்ஞை எதுவும் கிடைக்கவில்லை. முக்கியமாக நேட்டோ நாடுகளின் ஆதரவை அவர் கேட்டிருந்தார். அது கிடைக்காததால் கோபம் கொண்ட அவர் நேட்டோ நாடுகளை கோழைகள் என்றும் காகிதப் புலிகள் என்றும் திட்டித் தீர்த்தார். அதேசமயம் தமது முகாமுக்குள்ளிருந்து தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தின் இயக்குனர் ஜோசெப் கென்ட் விலகியது இவருக்கு தோல்வியாக அமைந்ததை சர்வதேசத்துக்கு தெரியப்படுத்தியது.

வாக்ஷிங்டனில் பிளவு உண்டானதால் அந்தக் கூடாரம் பலவீனமடைந்திருக்கிறது என்பதை பலரும் பகிரங்கமாக அறிந்து கொண்டனர். இது ஈரானுக்கு பலமூட்டுவதாக மாறியது. இதன் பின்னர் அமெரிக்கா போருக்கான காலக்கெடுவை தீர்மானிக்கவில்லையென்று கூறிய ஹெக்சேட் போரை எப்போது நிறுத்த வேண்டுமென ட்ரம்பே தீர்மானிப்பார் எனவும் அறிவித்தார். கடந்த 20ம் திகதி ஒரு முக்கியமான அறிவிப்பை ட்ரம்ப் விடுத்தார். ஈரான் போரில் தங்களின் மகத்தான ராணுவ முயற்சிகளை நிறுத்துவது குறித்து தாங்கள் பரிசீலித்து வருவதாக தெரிவித்த அவர், தங்கள்

க்கு வந்திருப்பதாக சர்வதேசம் கருதுகின்றது.

இந்தக் கருத்தை வலுவுட்டுவதாக



ஈரானின் புதிய தலைவர் (போரில் கொல்லப்பட்ட தலைவர் கமேனியின் புதல்வர்) மொஜிதபா கமேனியின் பெயரில் வெளிவந்த செய்தி அமைந்துள்ளது. பாரசீகத்தின் புத்தாண்டை முன்னிட்டு இவர் வெளியிட்ட செய்தியில் – எதிரி தோற்கடிக்கப்பட்டார் – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் மீது தொடுக்கப்பட்ட போரை ட்ரம்பின் போர் என்று ஏற்கனவே விபரித்திருந்த ஈரானின் புதிய அதிபர், எதிரி தோற்கடிக்கப்பட்டார் என்ற வாசகத்தினூடாக ட்ரம்ப் தோற்கடிக்கப்பட்டார் என்று சுட்டியதாக பார்க்கக் கூடியதாகவுள்ளது. ஈரானின் ஒற்றுமை எதிரியை தோற்கடித்து விட்டது என்றும் இந்தச் செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் எழுச்சியுடன் மேற்கொள்ளப்படும் எந்தவொரு போராட்டமும் தோல்வியடையாது என்பதற்கு மொஜிதபா கமேனியின் அறிக்கை வலுஊட்டுவதாக அமைந்துள்ளது. மத்திய கிழக்கு போர் முடிந்ததா ,ல்லையா என்று முழுமையாக புலப்படாத நிலையில் ஈரானிய அதிபர் எதிரி தோற்கடிக்கப்பட்டார் என்று விளித்தவாறு விடுக்கப்பட்டிருக்கும் செய்தி ஈரானிய மக்களையும் போர் வீரர்களையும் உற்சாகப்படுத்துவதாக அமைந்துள்ளது.

ஈரானிய புதிய அதிபரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில வாசகங்கள் ஆழமாக சிந்திக்கப்பட்ட பின்னர் தயாரிக்கப்பட்டது என்பதை வெளிப்படுத்துகிறது. 'நவ்றுாஸ் பண்டிகையை கொண்டாடிய ஈரானிய மக்களின் உறுதி பாராட்டப்பட வேண்டியது. இது தேசிய ஒற்றுமை மற்றும் தேசிய பாதுகாப்பின் கீழ் ஓர் எதிர்ப்புப் பொருளாதாரத்தின் ஆண்டை தொடக்கி வைத்துள்ளது' என்று இச்செய்தியின் தொடக்கம் தெரிவிக்கிறது.

ஈரானிய மக்களாகிய உங்களுடைய மத அறிவுசார் கலாசார மற்றும் அரசியல் பின்னணிகளால் உள்ள அனைத்து வேறுபாடுகளையும் மீறி உருவாகியுள்ள தனித்துவமான ஒற்றுமையின் காரணமாக எதிரி தோற்கடிக்கப்பட்டுள்ளார் என்று இங்கு மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஓரிரு நாட்கள் தாக்குதல்களுக்குப் பின்னர் ஈரானிய மக்கள் அரசாங்கத்தை கவிழ்த்து விடுவார்களென்று அமெரிக்காவும் இஸ்ரேலும் நம்பியது பெரும் தவறான கணிப்பு என்றும் ஈரானிய தலைவர் இங்கு தெரிவித்துள்ளார்.

எதிரியிடம் ஒரு பிளவு ஏற்பட்டுள்ளது என்று இங்கு இவர் குறிப்பிட்டிருப்பது அமெரிக்காவின் தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தின் இயக்குனர் ஜோசெப் கென்ட் போரின் நடுவில் பதவி விலகியதை சுட்டுவதாக அமைந்துள்ளது. இந்தப் பதவி விலகலால் வாக்ஷிங்டன் பலவீனப்பட்டுள்ளது என்பது ஈரானிய தலைவரின் பார்வையாக அமைந்துள்ளது.

அதேசமயம் ஈரான் அரசமட்டத்திலும் மக்களிடையேயும் எந்தப் பிளவும் ஏற்படாது தொடர்ந்து நிலவிய ஒற்றுமையே எதிரிக்குக் கிடைத்துள்ள தோல்வி என்பதை ,து மறைபொருளில் கூறுவதாக காணக்கூடியதாகவிருக்கிறது.

கட்டுரையாளர்:-
பனங்காட்டான்

அதிகார வெற்றிடம் ஏற்படும் என்ற அச்சத்தை கருத்தில் கொண்டே ஈரானிய அரசமைப்புச் சட்டம் வரைவு செய்யப்பட்டதாகவும், எந்தத் தருணத்திலும் அந்த அமைப்பு தொடர்ந்து ,யங்குவதற்கான திறனை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டதானது அது தோல்வியிலிருந்து தப்புவதற்கான நெறிமுறையாக அமைந்தது என்றும் போரை அவதானித்த நாடுகள் கருத்து வெளியிட்டுள்ளன.

வளைகுடா யுத்தத்தின் போது இலங்கை தனது அணிசேராக் கொள்கையை எவ்வாறு கடைப்பிடித்தது என்பது சர்வதேசத்தினால் நுணுக்கமாக அவதானிக்கப்பட்டுள்ளது. இதனை தமது நாடாளுமன்ற சிறப்புரையில் ஜனாதிபதி அநுரகுமர திஸ்ஸநாயக்க துல்லியமாக வெளிப்படுத்தியுள்ளார்.

போர்க் காலத்தில் ஈரானிய கப்பல்கள் ,லங்கை கடற்பகுதிக்குள் நுழைய விரும்பியபோது மறுக்கப்பட்டதையும், அமெரிக்காவின் இரண்டு விமானங்கள் மத்தள விமான நிலையத்தில் இறங்குவதற்கு அனுமதி கேட்டபோது நிராகரிக்கப்பட்டதையும் குறிப்பிட்ட அநுரகுமரதிஸ்ஸநாயக்க தமது அரசு நிதானமாக நடுநிலைமையை கடைப்பிடித்ததாக தெரிவித்துள்ளார். அதே வேளை சர்வதேச விதிமுறைகளுக்கமைய மனிதாபிமான அடிப்படையில் இலங்கைக் கடல் எல்லைக்கப்பால் எரிந்து கொண்டிருந்த கப்பலிலிருந்தவர்களை மீட்டதையும், காயப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்ததையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியலில் எதிர்க ்கட்சிகள் என்பவை எப்போதும் எதனையும் எதிர்த்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்ற போக்கில் எதிர்பாராத போர்க்காலச் சூழலில் இலங்கை அரசு சந்திக்கும் நெருக்கடிகளை தங்களுக்கு சாதகமாக்கும் தன்மை வெளிப்படையாகவே காணப்படுகிறது. போர் முடியுமா முடியாதா என்பது தெரியாவிட்டாலும் அதன் தாக்கம் சில காலத்துக்கு தொடர்ந்தே இருக்கும். இது எல்லா நாடுகளுக்குமே சோதனைக் காலமாக அமையலாம்.

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்தபட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

21 மார்ச் 2026 முதல் 27 மார்ச் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு நல்லதம்பி நவரட்ணலிங்கம்

இறுப்பிட்டி புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் தலையாட்டி வேலணையை வதிவிடமாகவும் மார்க்கம் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நல்லதம்பி நவரட்ணலிங்கம் அவர்களது 31ம்நாள் நினைவுநாள் 29 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நல்லதம்பி நவரட்ணலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி கந்தசாமி

அனலைதீவு 5ம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களது 31ம்நாள் நினைவுநாள் 20 மார்ச் 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லம் செஞ்சோலை இல்லம் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து மூன்று இல்லக் குழந்தைகளும் ஈழநாடுவாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம்

புங்குடுதீவு 6ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 22 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம்

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிசை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம் அவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 20 மார்ச் 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களுடைய எட்டாவது ஆண்டு நினைவு நாள் 19 மார்ச் 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு முருகேசு பிறேம்குமார்

யாழ்ப்பாணம் அரியாலைப் பிறப்பிடமாகவும் கனடா வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு பிறேம்குமார் அவர்களுடைய ஆறாவது ஆண்டு நினைவு நாள் 23 மார்ச் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது பிள்ளைகளும் துணைவியாரும் மற்றும் உறவுகளும் இணைந்து அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு முருகேசு பிறேம்குமார் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




04 மார்ச் 2026 புதன்கிழமை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




04 மார்ச் 2026 புதன்கிழமை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




05 மார்ச் 2026 வியாழக்கிழமை வீரபத்திரர் கோவிலடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்த்யோர்க் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




08 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி சியாமி சிவா அவர்களின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சியாமி சிவா அவர்கள் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




08 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீகுமார் ரோகினிதேவி தம்பதிகளுன் செல்வப்புதல்வி ஸ்ரீதேவி ஸ்ரீகுமாரின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஸ்ரீதேவி தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




16 மார்ச் 2026 திங்கட்கிழமை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் ஒட்டவா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த கனடா பாராளுமன்ற ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் திரு எட்வேட் செல்வதாஸ் (தாஸ்) அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




19 மார்ச் 2026 வியாழக்கிழமை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி முருகேசபிள்ளை தெய்வானைப்பிள்ளை அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




20 மார்ச் 2026 வெள்ளிக்கிழமை அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





20 மார்ச் 2026 வெள்ளிக்கிழமை அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




20 மார்ச் 2026 வெள்ளிக்கிழமை அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




20 மார்ச் 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதிஇல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நிர்மலகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வி ஜெனனி நிர்மலகுமாரின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஜெனனி தனது பெற்றோர்கள் சகோதரத்துடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




23 மார்ச் 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கஜன் கௌசிகா இணையர்களது ஏழாவது ஆண்டு இருமன இணைவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்.




23 மார்ச் 2026 திங்கட்கிழமை யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பிறேம்குமார் முருகேசு அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# யாழில் விரிவுரையாளர் படுகொலை:- மகள் கூறிய வாக்கு மூலம் பொலிஸ் விசாரணையில் வெளிப்பட்ட திடுக்கிடும் தகவல்!



எனது மனைவி அவரது தாயாரின் கால்களை அழுத்தி பிடிக்க நான் கழுத்தை நெரித்து படுகொலை செய்தேன் என யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளரின் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய விரிவுரையாளரின் மருமகனான பிரதான சந்தேகநபரான பொலிசாரிடம் வாக்கு மூலம் அளித்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்த மருத்துவ பீட மூத்த விரிவுரையாளரான வைத்தியர் தயாளினி திலீபன் (வயது 54) என்பவர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் கடந்த 21 மார்ச் 2026 சனிக்கிழமை தனங்கிளப்பு பகுதியில் உள்ள பற்றைக் காடொன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பில், பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரிய வருவதாவது, கொலையின் பிரதான சந்தேகநபரான அரியாலை பகுதியை சேர்ந்த திவாகர் (வயது20) எனும் இளைஞன் விரிவுரையாளரின் மகளான சுவித்தியா (வயது 19) என்பவரை காதலித்து வந்த நிலையில் கடந்த வருடம் (18 வயது திருமண வயதை எட்டியதும்) இருவரும் வீட்டை விட்டு வெளியேறி பதிவு திருமணம் செய்துள்ளனர்.

பதிவு திருமணம் செய்து சுமார் 3 மாத காலம் வாழ்ந்த நிலையில் சுவித்தியா கணவருடன் வாழ முடியாது. கொடுமைகளுக்கு தான் உள்ளாவதாக கூறி தாய் வீட்டிற்கு திரும்பியுள்ளார். அதனை அடுத்து ஓரிரு மாதங்களில் தனக்கு விவாகரத்து கோரி யாழ். மாவட்ட நீதிமன்றில் தாயரின் அறிவுறுத்தலில் பிரபல மூத்த சட்டத்தரணி ஊடாக வழக்கு தொடர்ந்துள்ளார்.

குறித்த வழக்கு விசாரணைகள் நீதிமன்றில் நடைபெற்று வந்த வேளை பெண்ணின் கணவன் நீதிமன்ற வழக்கு விசாரணைகளுக்கு சமூகமளிக்காது இருந்துள்ளார். இரு தவணைகளுக்கு மேல் சமூகமளிக்காத நிலையில் வழக்கினை ஒரு முக விளக்கத்திற்கு எடுக்குமாறு சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்த நிலையில் வழக்கு அடுத்த தவணைக்கு திகதியிடப்பட்டது.

வழக்கு தவணைக்கு தான் செல்லாததும் வழக்கு ஒரு முக விளக்கத்திற்கு சென்று தமக்கு விவாகரத்து கிடைத்து விடும் என அறிந்த கணவனான திவாகர் கடந்த 17ஆம் திகதி பாண்டியன் தாழ்வு பகுதியில் உள்ள தனது மனைவியின் வீட்டிற்கு நள்ளிரவு வேளை மோட்டார் சைக்கிளில் சென்று மோட்டார் சைக்கிளை வீட்டின் வெளியே நிறுத்திய பின்னர் வீட்டின் ஓட்டை கழட்டி கயிறு மூலம் மனைவியின் அறைக்குள் இறங்கியுள்ளார்.

அங்கு நித்திரையாக இருந்த மனைவியை எழுப்பி தனது செயற்பாடுகளுக்கு மன்னிப்பு கோரி சமாதானமாகி மீண்டும் இருவரும் சேர்ந்து வாழ்வோம் என கோரியுள்ளார்.

அதற்கு மனைவி தாம் இருவரும் சேர்ந்து வாழ அம்மா அனுமதிக்க மாட்டார் என கூறியதை அடுத்து அவர் உயிருடன் இருந்தால் தானே அனுமதிக்க மாட்டார். அவரை கொலை செய்வோம் என கூறி தாயாரின் அறைக்குள் சென்றுள்ளனர். அங்கு தூக்கத்தில் இருந்த தாயின் கால்களை மகள் அழுத்தி பிடிக்க மகளின் கணவன் கழுத்தை நெரித்து படுகொலை செய்துள்ளார் உயிரிழந்த தாயின் சடலத்தை படுக்கை விரிப்பினால் (பெட் சீட்) சுற்றி கட்டி தாயின் காரின் பின் பகுதியில் சடலத்தை மறைத்து வைத்த பின்னர் கணவன் மனைவியான இருவரும் வீட்டை விட்டு வெளியேறி கணவனின் மோட்டார் சைக்கிளில் கணவனின் வீட்டிற்கு சென்று அங்கு மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வாடகை வாகனம் ஒன்றினை வாடகைக்கு அமர்த்தி மீண்டும் தனது வீட்டிற்கு கணவனுடன் வந்துள்ளார்.

பின்னர் விரிவுரையாளரான தனது தாயின் வங்கி அட்டையையும் நகைகள் சிலவற்றையும் எடுத்து கொண்டு தாயின் காரில் தாயின் சடலத்துடன் பயணித்து , தனங்கிளப்பு பகுதியில் உள்ள பற்றை காட்டில் சடலத்தை வீசி விட்டு காரில் தொடர்ந்து பயணித்துள்ளனர்.

பரந்தன் பகுதியில் தாயின் வங்கி அட்டையை பயன்படுத்தி பணத்தினை பெற்று காரில் தொடர்ந்து பயணித்துள்ளனர். பின்னர் திருகோணமலை பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் காருக்கு QR பயன்படுத்தி எரிபொருள் நிரப்பியுள்ளனர். அதனை தொடர்ந்து தாயின் ஒரு ஜோடி காப்பை அடமானம் வைத்து பணம் பெற்றுள்ளனர். அந்த பணத்தில் திருகோணமலையில் வாடகைக்கு வீடொன்றினை பெற்று வாழ்ந்துள்ளார்.

அதேவேளை கடந்த 17ஆம் திகதி நள்ளிரவு முதல் தனது தாயையும் சகோதரியையும் காணவில்லை என விரிவுரையாளரின் மகன் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ததுடன் , சகோதரியின்

(22ம் பக்கம் பார்க்க)

கடன் தொல்லையா?
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# போர்களும் பிரசாரப் போரும்

போர் என்பது, தனியே படைகள் மோதிக் கொள்ளுகின்ற களங்களைக் கொண்டது மாத்திரமல்ல. உண்மையும், பொய்களும் மோதுகின்ற பிரசாரப் போர்களையும் கொண்டது தான்.

போரில் வெல்வதற்கு, பிரசார போரும் அவசியம். போருக்கான அவசியத்தை, அதன் நியாயப்பாட்டை வெளிப்படுத்தி,







போருக்கு தேவையான ஆளணியை திரட்டுவதற்கும், ஆயுதங்களை பெறுவதற்கும், பிரசாரம் முக்கியம். பிரசாரப் போரில் தோல்வியடைந்த தரப்புகளால், போர் முனையில் வெற்றி பெறுவது கடினம்.

இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரின் எழுச்சிக்கும் வெற்றிக்கும் முக்கியமான காரணமாக இருந்தது அவரது பிரசாரம். தீவிர வலதுசாரி கொள்கையை ஹிட்லர் மிகத்தீவிரமாக பிரசாரப்படுத்தினார். அவரது பேச்சு வன்மையும் பிரசாரங்களும் ஜேர்மனியர்களை யூத எதிர்ப்பாளர்களாக மாற்றின. அவர்கள் பிற நாடுகளின் மீது போர் தொடுக்கவும் அந்தப் போர்களில் வெற்றி பெறவும் வழி வகுத்தன. அப்போது, ஹிட்லரின் பிரசாரப் பீரங்கியாக இருந்தவர் ஜோசப் கோயபெல்ஸ்.

அவர் போர் தொடர்பாக நிறைய பொய்களை அவிழ்த்து விட்டிருந்தார். அவரது பிரசாரம் போர்முனையில் நாசிப் படைகளுக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தியது. இறுதி வெற்றி கிடைக்கா விட்டாலும் இரண்டாம் உலகப்போரில், ஹிட்லரின் படைகள் தீர்க்கமான வெற்றிகள் பலவற்றை பெறுவதற்கு அந்தப் பிரசார போர் உதவியது என்பது மறுக்க முடியாத உண்மை. எல்லா போர்களிலுமே, பிரசாரத்தை மையப்படுத்தி இன்னொரு போர்முனை திறக்கப்படுவது வழமை.

இலங்கையிலும் இந்தப் பிரசாரப் போர் பல முறை, பல வழிகளில், பல தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டது. ஆரம்பக் காலகட்டங்களில் இலங்கை அரசாங்கத் திடம் ஒரு பிரசார இயந்திரம் காணப்பட்டது. அது எப்போதும் தமிழர்களை தீவிரவாதிகளாகவும், தமிழரின் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமாகவுமே அடையாளப்படுத்தியது.

பின்னர் இந்தியத் தலையீடு ஏற்பட்ட போதும், கூட இவ்வாறான பிரசார போர் தமிழர்கள் மீது முன்னெடுக்கப்பட்டது. அதற்குப் பின்னர் இலங்கை இராணுவத்திற்குள் பிரசாரப் போரை மேற்கொள்வதற்காக தனியான பிரிவுகள், துணை இராணுவ பிரிவுகள் என்று உருவாக்கப்பட்டன.

ஒரு காலகட்டத்தில் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த பிரசாரப் போர், பின்னர் ஒரு கட்டத்தில் இணைய ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும், பரவியது. இதனை எதிர்ப்பதற்கு தமிழர் தரப்பிலும், பிரசார போர்கள் மேற்கொள்ளப்பட்டன. அதற்காக வானொலி, தொலைக்காட்சி , இணையங்கள் மாத்திரமன்றி, தெருவழி நாடகங்களும் கூட பயன்படுத்தப்பட்டன. இன்றைய நவீன உலகில் பிரசாரப் போர் இன்னும் முக்கியமானது.

பிரசார போர்களில், வலிமை பெறுகின்றவர், போர் முனையிலும் வலிமை வாய்ந்தவராக கருதப்படும் வாய்ப்பு உள்ளது.

ஈரான் மீதான போர் தொடங்கிய போது, அமெரிக்காவும் இஸ்ரேலும் மிகப்பெரிய நம்பிக்கையை வைத்திருந்தன. முதல் குண்டிலேயே ஈரானின் உயர்தலைவர் ஆயத்துல்லா அலி கமேனி படுகொலை செய்யப்பட்டார். அவருடன் உயர் தலைவர்கள் பலரும் கொல்லப்பட்டனர். அத்துடன் சில தாக்குதல்களை நடத்தினால் போதும், ஈரானில் ஆட்சி மாற்றம் வந்து விடும் என்ற நம்பிக்கை இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவிடம் காணப்பட்டது. அதற்கு முன்னர், ஈரானில் மக்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். அதை நசுக்குவதற்கு பெருமெடுப்பில் ஈரானிய ஆட்சியாளர்கள் மக்களை கொல்லுகிறார்கள் என்ற பிரசாரம் உலகளவில் மேற்கொள்ளப்பட்டது.

அதில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் மட்டும் அதில் சம்பந்தப்பட்டிருக்க வில்லை. தங்களை நடுநிலையாளர்களாக காட்டிக் கொண்ட நாடுகள், அமைப்புகள் கூட அந்த பிரசாரப் போரில் ஒரு தரப்பாக இணைந்திருந்தன. ஈரானில் நடந்த மக்கள் கிளர்ச்சி தொடர்பான முற்றிலும் உண்மையான தகவல்கள் கிடையாது. ஆனால் எல்லோரும் அந்தப் பிரசாரப் போரில் பங்காளிகளாக மாறியிருந்தனர்.

இதேபோன்ற பிரசாரப் போர் அனுபவங்கள் இங்குள்ள தமிழர்களுக்கும் தாராளமாகவே உள்ளது. அதனால், ஈரான் விடயத்தில் இது எந்தளவு மோசமாக கையாளப்பட்டிருக்கும் என்று புரிந்து கொள்வது கடினமானதல்ல.

ஈரானில் 15,000 பேருக்கு மேல் படுகொலை செய்யப்பட்டிருந்தால், கிளர்ச்சி மோசமாக அடக்கப்பட்டிருந்தால், இந்தளவு தாக்குதல்களுக்குப் பின்னரும் அங்குள்ள மக்கள் ஆட்சி மாற்றத்தை தூண்டாமல் இருந்திருக்கமாட்டார்கள்.

இஸ்ரேலும், அமெரிக்காவும் அப்படியான நம்பிக்கையில் இருந்தன. அதனால் தான் இன்றோ நாளையோ ஆட்சி மாற்றம் நடக்கப் போகிறது என்று ஆரம்பத்தில் கதை சொல்லிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பிரசாரப் போர் இப்போது முடிவுக்கு வந்துவிட்டது.

இப்போது களைத்து போய் ஈரானிய மக்கள் தாங்களாக கிளர்ந்தெழுந்து ஆட்சியை மாற்றினால் சரி என்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள்.

இது ஆட்சி மாற்றம் என்பது இலகுவானது அல்ல என்பதை வெளிப்படுத்தியிருக்கிறது. இது அவர்களின் முதல் தோல்வி. பிரசாரப் போரில் அடைந்திருக்கின்ற பெருந்தோல்வியானது அமெரிக்க – இஸ்ரேல் பிரசாரப் போர், ஈரானியர்களை பலவீனப்படுத்தவில்லை என்பது உணர்த்துகிறது. இப்போது அமெரிக்காவும் இஸ்ரேலும், கூறுவதை நம்புகின்ற நிலையில் உலகம் இல்லை.

ஈரான் தொடர்பாக அமெரிக்காவும் இஸ்ரேலும் கூறுகின்ற செய்திகள் அனைத்தும் உண்மை அல்ல என்ற கருத்து அவர்களிடம் இருக்கிறது. இது இந்தப் பிரசாரப் போரின் தோல்வியின் விளைவு. இப்போது நிலைமை மாறியிருக்கிறது, ஈரான் பிரசாரப் போரில் முன்னேறத் தொடங்கியிருக்கிறது.

ஆரம்பத்தில் ஈரானிய தலைவர்கள் கொல்லப்பட்டு விட்டதாக இஸ்ரேல் சொல்வதை மட்டும் கேட்டுக் கொண்டிருந்தவர்கள், இப்போது ஈரான் சொல்வதையும் கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

இஸ்ரேலிய பிரதமரின் அலுவலகத்தை தாக்கினோம், அவர் கொல்லப்பட்டு விட்டார், அவர் இருக்கிறாரா இல்லையா என்று தெரியவில்லை என்பது போல ஈரான் நடத்திய பிரசாரப் போர், அதிகளவில் கவனத்தை ஈர்த்தது.

இது ஈரானிய மக்களுக்கு ஊக்கத்தை கொடுக்கிறதோ இல்லையோ இஸ்ரேலியர்களுக்கு உளைச்சலை தொந்தரவை கொடுக்கிறது. அமெரிக்காவுக்கும் கூட அதேஉளைச்சலை ஏற்படுத்துகிறது.

அண்மையில் நடந்த சில விடயங்கள் இதனை உறுதி செய்வதாக உள்ளன. இஸ்ரேலிய பிரதமர் பெஞ்ஜமின் நெதன்யாஹூ கொல்லப்பட்டு விட்டார் என்று ஈரான் செய்த பிரசாரப் போரை முறியடிப்பதற்காக அவர் வெளியே வர நேரிட்டது.

ஒரு கோப்பி கடைக்குச் சென்று கோப்பி குடித்துக் கொண்டு வீடியோவை வெளியிட நேரிட்டது. ஆனாலும் அதுவும் , செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் தயாரிக்கப்பட்டது என்ற சர்ச்சையும் ஏற்பட்டிருக்கிறது. இந்த பிரசாரப் போரில் ஈரான் வெற்றி பெற்றிருக்கிறது.

ஈரானின் இழுப்புக்கு ஏற்ப, நெதன்யாஹூ நகரத் தொடங்கியிருக்கிறார். தங்களை நோக்கியே மற்றவர் வரவேண்டும் என உறுதியாக நின்றவர், இப்போது ஈரானின் இழுப்பிற்கு ஏற்ப இழுபட்டுச் செல்கிறார்.

ஈரானின் பிரசாரப் போரை முறியடிக்க அவர் வீடியோவில் நடிக்க வேண்டியிருக்கிறது. தனது இடத்தில் இருந்து வெளியே வர வேண்டியிருக்கிறது. இது இஸ்ரேலின் இயல்பு அல்ல, யூதர்களின் பொதுவான பண்பு அல்ல. யூதர்கள் வித்தியாசமானவர்கள் என்பது உலகத்துக்கு தெரியும், ஆனால் இப்போது அந்த நிலையில் இல்லை என்பதை நெதன்யாஹூவின் நிதான இழப்பு எடுத்துக் காட்டுகிறது. இந்தப் போரில் பல விடயங்கள் மறைக்கப்படுகின்றன, மறுக்கப்படுகின்றன. இதற்கு அமெரிக்காவும் விதிவிலக்கல்ல. தனது உயர் தலைவர்கள் கொல்லப்பட்டதை ஈரான் மறைக்கவில்லை. அது தனக்கு மிகப் பெரிய பலவீனம் என்ற போதும் உண்மையை வெளிப்படுத்த ஈரான் தயங்கவில்லை.

ஆனால் இஸ்ரேலும் அமெரிக்காவும் இன்னும் பல இழப்புகளை உண்மைகளை வெளிப்படுத்த தயங்குகின்றன. வெளிப்படுத்தாமல் மறைக்கின்றன. இதிலிருந்து பலவீனமானவர்கள் யார்

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



என்பதை புரிந்து கொள்வது கடினம் அல்ல.

இப்போது அரபு நாடுகளின் மீது ஈரான் நடத்துகின்ற தாக்குதல்கள் தொடர்பான வீடியோக்கள் படங்களை பகிர்கின்றவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். இது இன்னொரு அச்சத்தின் வெளிப்பாடு. ஈரானின் பலம் பற்றி, அரபுநாடுகளில் உள்ள மக்கள் மத்தியில் எழுகின்ற உணர்வுகளை அடக்குகின்ற முயற்சி.

ஈரான் தொடர்பாக அவர்கள் மிகையான கற்பனை செய்யக் கூடாது, ஈரானுக்கு ஆதரவானவர்களாக மாறி விடக் கூடாது, தமது நாடுகளில் கிளர்ச்சி உருவாகி விடக்கூடாது என்ற அச்சத்தில் தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இது அமெரிக்காவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் ஒரு நடவடிக்கை. ஈரானின் பிரசாரப் போர் வலைக்குள் அவர்கள் சிக்கியிருக்கிறார்கள். ஈரான் மீதான போர் நியாயமற்றது என இத் தாலி அண்மையில் விலகிக் கொண்டது.

அந்த அறிவிப்பை இத்தாலிய பிரதமர் வெளியிட்ட சில மணி நேரத்திற்குள் இத்தாலிய படையினர் நிலை கொண்டிருந்த தளம் தாக்கப்பட்டது. அங்கிருந்து இத்தாலியின் ஆளில்லா விமானம் சேதமானது.

இது இத்தாலியை போருக்குள் இழுப்பதற்காக அமெரிக்கா மேற்கொண்ட சதி என்றும், இதேபோல நட்பு நாடுகளின் மீது அமெரிக்காவே ட்ரோன்களை ஏவுகிறது என்றும் ஈரான் குற்றம்சாட்டியது.

இதனை மறுத்து அமெரிக்கா தனியான அறிக்கைகளை வெளியிட நேரிட்டது. அமெரிக்கா இந்த போரில் பல அழுக்கான தந்திரங்களைப் பின்பற்றுகிறதா என்ற சந்தேகம் நட்பு நாடுகளிடம் ஏற்பட்டுள்ளது. இதுவும், பிரசாரப் போரில் அமெரிக்க இஸ்ரேல் தரப்பு அடைந்து வரும் பின்னடைவை காட்டுகிறது.

போரில் ஈரான் பேரழிவை சந்திக்கிறது, என்பது உண்மை. ஆயிரக்கணக்கான இலக்குகள் தாக்கப் படுகின்றன, அவற்றின் விளைவுகள் சாதாரணமானவையாக இருக்காது. பில்லியன் கணக்கான டொலர்களை அது இழக்கிறது. பொருளாதார நெருக்கடியில் உள்ள அந்த நாடு சிதைக்கப்படுகிறது. ஆனா லும் பிரசாரப் போரில் அமெரிக்காவினால் ஈரானை தோற்கடிக்க முடியவில்லை. ஈழப் போரின் போதும் இது நடந்தது.

விடுதலைப் புலிகள் தொடர்பான பிரசாரப் போரின் போது, புலிகளின் தலைவர் பிரபாகரன் இறந்து விட்டார் என பலமுறை கூறப்பட்டது. அந்தப் பிரசார போரில் அரச தரப்பு அடைந்த தோல்வி தான், கடைசியில் பிரபாகரன் உண்மையாகவே இறந்த போது, அதனை பலரால் நம்ப முடியாதிருந்தமையாகும். பிரசாரப் போர் சரியான முறையில் முன்னெடுக்கப்பட்டால் மாத்திரமே அதில் வெற்றி பெற முடியும். வெறும் பொய்களால் மாத்திரம் முன்னெடுக்கப்படும் பிரசாரப் போர்களால் வெற்றி பெற முடியாது என்பதை ஈரான் போரும் உணர்த்திக் கொண்டிருக்கிறது.

# லெபனான் மீதான இஸ்ரேலின் தரைவழிப் படையெடுப்புக்கு கனடா - பிரான்ஸ் கடுமையான எச்சரிக்கை!



லெபனான் மீது இஸ்ரேலியப் படைகள் ஒரு பெரும் தரைவழிப் படையெடுப்பை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள நிலையில், தெற்கு லெபனானைக் கைப்பற்றுவதற்கான இஸ்ரேலின் திட்டங்களை கனடா கடுமையாகக் கண்டிப்பதாக அறிவித்துள்ளது. அத்துடன் லெபனானின் இறையாண்மையும் பிராந்திய ஒருமைப்பாடும் 'மீறப்படக்கூடாது' என்றும் கனடா எச்சரித்துள்ளது.

இந்த மாதத் தொடக்கத்திலிருந்து இஸ்ரேலியத் தாக்குதல்களால் லெபனானில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை குறைந்தது 1,072 ஆகவும், காயமடைந்தவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 3,000 ஆகவும் உயர்ந்துள்ள சூழலில், லெபனானின் தெற்கு எல்லைக்குள் சுமார் 30 கி.மீ (18.6 மைல்கள்) வரையிலான பகுதிகளை ஆக்கிரமித்துத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான இஸ்ரேலின் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

நாட்டின் தெற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளிலும், தலைநகர் பெய்ரூட்டிலும் வாரக்கணக்கில் நீடித்து வரும் இஸ்ரேலியத் தாக்குதல்களால் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

அதேவேளையில் இஸ்ரேலின் தரைவழிப் படையெடுப்பு நெருங்கி வரும் நிலையில், அனைத்து மட்டங்களிலிருந்தும் மனிதாபிமான நெருக்கடி குறித்த எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

லெபனான் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் தனது 'ஒற்றுமையை' வெளிப்படுத்திய கனடாவின் உலக விவகார அமைச்சகம், இப்போரில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரும் 'சர்வதேச சட்டங்களுக்கு இணங்கச் செயல்பட வேண்டும்' என புதன்கிழமையன்று தெரிவித்துள்ளது.

பொதுமக்களைப் பாதுகாக்குமாறும், உள்கட்டமைப்புகள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் அமைதி காக்கும் படைகள் மீதான தாக்குதல்களைத் தவிர்க்குமாறும் அனைத்துத் தரப்பினரையும் நாங்கள் வலியுறுத்துகிறோம்,' என்று அந்த அமைச்சகம் ஒரு அறிக்கையில் தெரிவித்தது.

அதேவேளை செவ்வாய்க்கிழமையன்று, பிரான்சின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீன்-நோயல் பாரோட் எ , தெற்கு லெபனானை ஆக்கிரமிக்கும் தனது திட்டத்திலிருந்து இஸ்ரேல் விலகிக்கொள்ள வேண்டும் என்று கூயதுடன், இஸ்ரேலின் நடவடிக்கை பொதுமக்களின் மீது மிக மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரித்தார்.

பெரும் மனிதாபிமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதும், நாட்டின் ஏற்கனவே மோசமாக உள்ள சூழலை மேலும் சீர்குலைக்கக் கூடியது மான இத்தகைய தரைவழி நடவடிக்கைகளிலிருந்து இஸ்ரேலிய அதிகாரிகள் விலகிக்கொள்ளுமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம்,' என்றும் பாரோட் ஏஎஃப்பி (AFP) செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

அதேவேளை இஸ்ரேலிய எல்லையிலிருந்து சுமார் 30 கி.மீ தொலைவில் அமைந்துள்ள லிட்டானி நதி வரையிலான தெற்கு லெபனான் பகுதிகளைத் தனது இராணுவம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் என்று இஸ்ரேல் அறிவித்ததைத் தொடர்ந்தே, பிரான்ஸ் மற்றும் கனடாவின் இந்த அறிக்கைகள் வெளியாகியுள்ளன.

இஸ்ரேலின் பாதுகாப்புத்துறை அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் பேசுகையில், இராணுவம் 'லிட்டானி நதி வரையிலான பாதுகாப்பு மண்டலத்தைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும்' என்று கூறினார்.

மேலும் இடம்பெயர்ந்த லெபனான் மக்கள் நதிக்குத் தெற்கே அமைந்துள்ள தங்கள் வீடுகளுக்குத் திரும்ப, 'இஸ்ரேலின் வடக்குப்பகுதி மக்களுக்குப் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் வரை' அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார். காசா மீது இஸ்ரேல் நடத்திய இனப்படுகொலை போரின் கோர முகத்தை நினைவுட்டும் வகையில் பேசிய காட்ஸ், லெபனானில் இஸ்ரேலிய இராணுவம் 'ரஃபா மற்றும் பெய்ட் ஹனுான் நகரங்களின் மாதிரியைப் பின்பற்றி வருவதாக'க் கூறினார்.

பாலஸ்தீனியப் பகுதி மீதான போரின் போது, இவ்விரு நகரங்களும் கிட்டத் தட்ட தரைமட்டமாக்கப்பட்டன. திங்களன்று, இஸ்ரேலின் தீவிர வலதுசாரி நிதியமைச்சர் பெசலெல் ஸ்மோட்ரிச், தெற்கு லெபனானை இஸ்ரேல் அதிகாரப்பூர்வமாகத் தன்னுடன் (22ம் பக்கம் பார்க்க)



# மாயப்போரும் இரண்டுகால் பூச்சிகளும்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கார்ல் மார்க்ஸ் சொன்னார் மதம் ஓர் அபின் என்று. கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த ஹெபர்ட் மார்க்யூஸ் சொன்னார் நுகர்வுப் பண்டங்களே அபின் என்று. இந்த நூற்றாண்டில் தகவல் ஓர் அபினா?

சமூக வலைத்தள அல்கோரிதம் எனப்படுவது ஒருவகை போதை ஊக்குவிப்புத் தான். நீங்கள் எதை தேடுகிறீர்களோ அது உங்களைத் தேடி வரும். நீங்கள் எதைத் தேடுகிறீர்கள் என்று கண்டு அதை நோக்கி உங்களை ஊக்குவிப்பது. ஒரு போதைப்பொருள் பாவனையாளர் எந்தப் போதைக்குப் பழக்கப்படுகிறாரோ, அதே போதையை அவருக்குத் தொடர்ந்து ஊட்டுவதன் மூலம் அவரை அதற்கு அடிமையாக்கி விடுவது. அதாவது இலத்திரனியல் அடிமைகள். இதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் உலகளாவிய பரந்த மாய வலைப் பின்னலுக்குள் சிக்கிய ரெண்டு கால் பூச்சிகள்.



தகவல் ஒரு போதை மட்டும் அல்ல. கவிஞரும் திசை வாரப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவருமாகிய மு. பொன்னம்பலம் கூறுவார் தகவல் ஒரு மாயை என்று. செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சியோடு அது இப்பொழுது மகா மாயையாக உருவெடுத்து விட்டது. தகவல் புரட்சியின் ரெண்டு கால் பூச்சிகள் ஒரே சமயத்தில் மாயப் போரின் பலியாடுகளாகவும் இருக்கிறார்கள் பரிசோதனைக் கூட எலிகளாகவும் இருக்கிறார்கள் தம்வசமிழந்த பார்வையாளர்களாகவும் இருக்கிறார்கள்.

இஸ்ரேல் அண்மை ஆண்டுகளாக ஈரானிய தலைவர்கள் தளபதிகள் விஞ்ஞானிகளுக்கு எதிராக முன்னெடுத்து வரும் தாக்குதல்கள் பெருமளவுக்கு மாயத் தொழில்நுட்ப வகைப்பட்டவை தான். இப்பொழுதும் மேற்காசியாவில் திறக்கப்பட்டிருக்கும் போர்க்களத்தில் செயற்கை நுண்ணறிவின் பங்கு பெரியது. அந்த மாயப் போர்க்களத்தில் அதிகம் பலியாவது ஆசியர்கள் தான். மேற்கு நாடுகள் தங்களுடைய நவீன தொழில்நுட்பத் திறன்களையும் புதிய போர்த் தளபாடங்களையும் கண்டுபிடிப்புகளையும் பரிசோதனை செய்யும் ஆய்வுக் கூடங்கள் பெருமளவுக்கு ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க,கிழக்கு ஐரோப்பியப் போர்க் களங்கள் தான். மேற்கு ஐரோப்பாவும் அமெரிக்காவும் அனேகமாகப் பாதுகாப்பாக இருக்கும். ஏனைய பகுதிகள் தான் புதிய யுத்தத் தளபாடங்களின் பரிசோதனைக் கூடங்களாகப் பயன்படுத்தப்படும். குறிப்பாக உலகப் பேரரசு அமெரிக்கா எல்லா யுத்த அரங்குகளுக்கும் வெளியே .தொலைவில் பத்திரமாக இருக்கிறது. ஒசாமா பின் லேடன்தான் அமெரிக்காவை அதன் வாசற்படிவரை சென்று தாக்கினார்.

அணுகுண்டை தூய விஞ்ஞானத்தின் வார்த்தைகளில் சொன்னால் அது ஒரு யூதக் குண்டு. அதற்குரிய சமன்பாட்டை கண்டுபிடித்தது யூதரான ஐன்ஸ்டீன். அதனை ஒரு செய்முறையாக மாற்றியவர் யூதராகிய ஓபன்ஹெய்மர். அதனால் பிரயோக விஞ்ஞானத்தின் அடிப்படையில் கூறினால் அது முதலில் அமெரிக்க யூதக் குண்டு. ஆனால் அதை அவர்கள் பரிசோதித்த இடம் ஆசிய ஜப்பானில் தான். அணுகுண்டின் முதலாவது பரிசோதனைக் கூட எலிகள் ஆசியர்கள் தான். இப்பொழுது செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் உதவியோடு முன்னெடுக்கப்படும் மாயப் போரிலும் முதல் பலிகளும் பரிசோதனை கூட எலிகளும் பெருமளவுக்கு ஆசிரியர்களும் ஆபிரிக்கர்களும் உக்ரேனியர்களும் தான். ஆளில்லா விமானங்களின் மாயத் தாக்குதல்கள் அதிகம் நடந்த இடங்கள் ஆசிய ஆப்பிரிக்க கிழக்கு ஐரோப்பியப் பிராந்தியங்கள்தான்.

மூன்றாவது உலகப்போர் என்று ஒன்று இதுவரை நடக்கவில்லை. ஆனால் பனிப் போர் நடந்தது. அந்தப் பனிப் போரானது மேற்கு ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுக்கு நிழல் போராக இருந்தது. ஆனால் ஆசிய ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க பிராந்தியங்களில் நிஜப் போராக இருந்தது. பேரரசுகளின் நிழல் போரை ஏனைய நாடுகள் நிஜப் போராக முன்னெடுத்தன.

ஈழப்போரும் அப்படித் தான். ஜெயவர்த்தனா அமெரிக்காவின் நண்பனாக இருந்தார். இந்தியா, ரஸ்சியாவின் கூட்டாளியாக இருந்தது. 1983க்குப் பின் ஈழப் போர் எனப்படுவது பனிப் போரின் ஒரு பகுதியாக மாறியது. அதனாலேயே வளர்ந்தது. ஆசிரியர்களாகிய சிங்களவர்களும் ஆசிரியர்களாகிய தமிழர்களும் ஐரோப்பியர்களின் நிழல்போரை நிஜப்போராக முன்னெடுத்தார்கள்.

ஆசியர்களாகிய.அரசில்லாத, சிறிய ஈழத் தமிழர்கள் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் உசார் மனோநிலையிலிருந்தும் தற்காப்பு உணர்விலிருந்து விடுபடவில்லை. அதனால் தான் மேற்காசியாவில் போர் வெடித்த போது யாழ்ப்பாணத்தில் எரிபொருளுக்கும் எரிவாயுவுக்குமாக வரிசைகள் நின்றன.அதைப் பலரும் நக்கல் அடித்தார்கள். ஆனால் அது யாழ்ப்பாணத்து நோக்கு நிலையில் தவிர்க்க முடியாதது.

ஒரு குடா நாட்டு மனோநிலை அப்படித்தான் இருக்கும். யாழ்ப்பாணத்தவர்களின் தற்காப்பு உணர்வின் விளைவு தான் சேமிப்பு பண்பாடு. அது குடா நாட்டு மனோநிலையின் பிரதான அம்சம். போர் இந்த சேமிப்பு பண்பாட்டை மேலும் பலப்படுத்தியது. ஒருவகையில் போருக்குள் நின்று நிலைத்தமைக்கு அதுவும் காரணம்.

போருக்குப் பின்னரும் அந்த மனோநிலை அப்படியே மாறாமல் இருக்கிறது. ஏனென்றால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவில்லை. அதனால் யாழ்ப்பாணத்தவர்களின் மனோநிலை மட்டுமல்ல முழு ஈழத் தமிழர்களின் மனோநிலையும் ஒரு விதத்தில் அமைதியுறாத, கொந்தளித்த அண்செற்றில்ட் மனோ நிலையாகத் தான் காணப்படுகிறது. சதா உஷாராகவும், அளவுக்கு மிஞ்சிய தற்காப்பு உணர்வோடும் காணப்படுகிறது. எனினும் மேற்காசியாவில் யுத்தம் வெடித்த உடனே வரிசையில் நின்ற பலரும் இப்பொழுது தாங்கள் செய்தது சரி தான் என்று திருப்திப் படுகிறார்கள். ஒரு சிறிய மக்கள் கூட்டம் தற்காப்பு உணர்வோடு இருப்பதில், முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்வதில் தவறில்லை.

சில ஆண்டுகளுக்கு முன் ஒரு ராஜதந்திரி என்னிடம் கேட்டார் யாழ்ப்பாணத்தை ஒரு தூங்கா நகரமாக மாற்ற முடியுமா? என்று. யாழ்ப்பாணம் மட்டுமல்ல தென்னிலங்கையிலும் பல நகரங்கள் இரவு கிட்டத்தட்ட எட்டு மணிக்கு பின் தூங்கும் நகரங்கள் தான். விசேஷமாக வடக்கு கிழக்கில் உள்ள நகரங்கள் அதிகாலையில் சூரியனோடு சேர்ந்து விழித்தெழுவதில்லை. இரவானதும் ஒன்பது மணிக்கு முன்னரே பெரும்பாலான கடைகள் பூட்டப்பட்டு விடும். அதற்குக் காரணம் தமிழ்மக்களின் கூட்டு உளவியலில் ஒருவித உளவியல் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருப்பதுதான் என்று எனது நண்பன் ஒருவர் கூறுவார்.

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



இந்த உளவியல் ஊரடங்குச் சட்டம் என்பது முன்சொன்னது போல அண்செற்றில்ட்டான ஒரு கூட்டு உளவிகளின் விளைவு. இனப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காதவரை அது தொடர்ந்தும் இருக்கும். 2009 க்குப் பின்னரான தொடர்ச்சியான புலப்பெயர்ச்சிக்கு அதுவும் ஒரு பிரதான காரணம்.

அரசில்லாத சிறிய ஆசிய மக்கள் கூட்டம் ஆகிய ஈழத் தமிழர்கள் மேற்காசியப் போரில் நேரடியாகச் சம்பந்தப்படவில்லை. ஆனால் அமெரிக்கா போரை இலங்கை கடற்கரையில் இருந்து 19 கடல் மைல் வரை கொண்டு வந்து விட்டது. ஈரானியப் போர்க்கப்பல் அமெரிக்க நீர் மூழ்கியால் தாக்கப்பட்டது. எனவே இலங்கை போர்க்களத்துக்கு வெளியே இருக்கிறது என்று கூற முடியாது. மேலும் எரிவாயுவுக்கும் எரிபொருளுக்குமாக வரிசையில் நிற்கும் ஒரு நிலை வந்திருக்கிறது. புதன் கிழமை விடுமுறையாக்கப்பட்டிருக்கிறது. அதாவது போர் நமது குசினி அலுவலகம் .பாடசாலை வரை வந்துவிட்டது.

அமெரிக்கா எதிர்பார்த்தது போல ஈரான் துவண்டு விடவில்லை. தலையை நசுக்கினால் பாம்பு செத்துவிடும் என்று அமெரிக்காவும் இஸ்ரேலும் நம்பியிருக்கலாம். ஆனால் ஈரான் நின்று பிடிக்கின்றது. இந்தப் போரில் சீனாவும் ரஷ்யாவும் நேரடியாக போர்க்களத்தில் இறங்கவில்லை. ஆனால் ஈரானின் பின்னணிப் பலம் அந்த நாடுகள் தான். நிகழும் போரில் சீனா ரஷ்யா ஆகிய இரண்டு நாடுகளினதும் பங்களிப்பின் அளவும் பங்களிப்பின் தன்மையும் தான் புதிய உலக வலுச் சமநிலையைத் தீர்மானிக்கும். அவ்வாறு உலக வலுச் சமநிலையில் ஏற்படும் தளம்பல்கள் சிறிய ஈழத் தமிழர்களின் அரசியலிலும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தும். பனிப் போர் எப்படி ஈழப் போரில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியதோ அப்படி. கடந்த 16 ஆண்டு காலமாக சீனாவுக்கு எதிரான மேற்கத்திய வியூகத்தின் ஒரு பகுதியாக ஈழத் தமிழர்கள் ஐநாவில் கையாளப்படுவதையும் அவ்வாறு தான் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே பிராந்தியத்தில் கண்டத்தில், பூகோள அளவில் ஏற்படும் திருப்பகரமான மாற்றங்கள் ஈழத் தமிழர்களுக்கு புதிய வாய்ப்புகளை திறக்கக்கூடும். சில சமயம் இருக்கின்ற வாய்ப்புகளை மூடவும்கூடும்.

ஆனால் அவ்வாறு ஏற்படக் கூடிய மாற்றங்கள் ஈழத் தமிழ் அரசியலில் இலங்கை அரசியலில் என்னதான் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தினாலும், அவற்றைக் கையாள்வதற்கு ஈழத் தமிழர்கள் தயாராக இருக்கிறார்களா?

# கடந்த காலப் பிரச்சனைகளைக் கையாள்வதற்கு முன்வரும் அரசாங்கம்

கட்டுரையாளர்:
கலாநிதி
-ஜெகான் பெரேரா-



இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் சகலரையும் இலங்கைக்கு திரும்பி வருமாறு வலியுறுத்தியிருக்கும் அமைச்சர் பிமால் இரத்நாயக்க, அவர்களை எமது சமூகத்தில் ஒன்றிணைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக கூறியிருக்கிறார். இந்தியாவில் தொடர்ந்தும் தங்கியிருக்க விரும்பும் அகதிகளுக்கு குடியுரிமையை வழங்குமாறு இந்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கும் அவர், அந்த அகதிகள் இலங்கையைத் தெரிவு செய்வார்களேயானால், இரு கரங்களாலும் அவர்களை அரசாங்கம் வரவேற்கும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கை தமிழரசு கட்சியின் பெருந்தலைவரும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வென்றுக்காக குரல் கொடுத்தவருமான எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மகன் எஸ்.சி. சந்திரகாசன் தலைமையிலான அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனமான ஈழ அகதிகள் புனர்வாழ்வுக்கான அமைப்புக்கு அமைச்சர் இரத்நாயக்க உரிய பாராட்டைத் தெரிவித்தார்.

சந்திரகாசனின் அமைப்பு அகதிகளுக்கு குறிப்பாக இந்தியாவில் உள்ள தமிழ் அகதிகளுக்கு பல தசாப்தங்களாக உதவி வருகிறது. இலங்கை அகதிகள் தங்களது சுயவிருப்பத்தின் பேரில் இலங்கை திரும்புவதை ஆதரித்து குரல் கொடுத்ததுடன் அந்த அமைப்பு அதற்கான ஆவணங்களை தயார் செய்து கொடுத்து வந்திருக்கிறது.

டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்டவர்களை மீள்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மந்தகதியில் நகர்வதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இந்தியாவில் இருந்து நாடுதிரும்பும் அகதிகளைக் கையாளுவதற்கு போதுமான முன்னேற்பாடுகளை செய்யவேண்டிய தேவை அரசாங்கத்துக்கு ஏற்படும்.

சாத்தியமான சகல உதவிகளும் அரசாங்கத்துக்கு தேவைப்படும். மக்களுக்கு நேரடியாக உதவும்போது அரசாங்க சார்பற்ற தனானார்வ அமைப்புகள் செய்யும் பணிகளை அரசாங்கம் மெச்சுகிறது என்பதை அமைச்சர் இரத்நாயக்கவின் கருத்து எடுத்துக் காட்டுகிறது.

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளின் பிரச்சினை மூன்று தசாப்த கால போரின் ஒரு மரபாகும். அந்த போர் தமிழ் மக்களை வெளிநாடுகளுக்கு புலம்பெயர வைத்தது. பரவலாக மேற்கோள் காட்டப்படுகின்ற மதிப்பீடுகளின் பிரகாரம் இன்று புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை பத்து இலட்சத்துக்கும் அதிகமாகும். உலகளாவிய ரீதியில் அவர்களின் தொகை பெரும்பாலும் பத்து இலட்சத்துக்கும் 15 இலட்சத்துக்கும் இடைப்பட்டது என்று கூறபடுகிறது. அவர்கள் பெரிய சமூகங்களாக கனடா, ஐக்கிய இராச்சியம் மற்றும் அவுஸ்திரேலியாவில் வாழ்கிறார்கள்.

இந்தியா குறிப்பாக தமிழ்நாடு கணிசமான அகதிகள் சனத்தொகைக்கு வாழ்வளித்து வருகிறது. தற்போதைய புள்ளி விபரங்கள் தமிழ்நாட்டில் அகதி முகாம்களில் 58 ஆயிரத்துக்கும் 60 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையான இலங்கைத் தமிழ் அகதிகள் வாழ்வதாகக் கூறுகின்றன.

மேலும், 30 ஆயிரத்துக்கும் 35 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையானவர்கள் முகாம்களுக்கு வெளியில் வாழ்கிறார்கள். எல்லாமாக சுமார் 90 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். நாளடைவில் இந்த எண்ணிக்கை வீழ்ச்சியடைந்திருக்கிறது. ஆனால், அவர்கள் இலங்கை மோதலின் கண்ணுக்குத் தெரிகின்ற மனித மரபுகளாக தொடர்ந்து விளங்குகிறார்கள்.

தமிழ் அகதிகளை நாடு திரும்புமாறு அறிவிப்பைச் செய்வதற்கு தற்போதைய தருணத்தை அரசாங்கம் தெரிவு செய்தமை சமகாலத்துக்குள் தொடருகின்ற கடந்த கால மனித உரிமைகள் பிரச்சினைகளை மூடி முறைக்க அரசாங்கம் முயற்சிக்கவில்லை என்பதை காட்டுகிறது.

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் கவலைகளும் கரிசனைகளும் மறக்கப்படாமல் தேசிய நிகழ்ச்சி நிரலில் தொடர்ந்தும் இடம் பெறுகின்றன என்பதை நினைவு ஊட்டுவதற்காகவும் இந்த அறிவிப்புச் செய்யப்பட்டிருக்கலாம்.

இந்தியாவில் தொடர்ந்தும் அகதிகளாக வாழ்கின்றவர்களுக்கு புறம்பாக, காணாமல் போனவர்கள் தொடர்பான 14 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் இன்னமும் விசாரணையில் இருக்கின்றன என்று காணாமல் போனோர் விவகார அலுவலகத்தின்



மூலமாக அறியக் கூடியதாக இருக்கிறது. அந்த அலுவலகம் நிறுவப்பட்ட பிறகு பல்லாயிரக்கணக்கான முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் சில விடுவிக்கப்பட்டிருந்தாலும், பெருமளவு நிலங்கள் திருப்பிக் கையளிக்கப்படாததால் தொடரும் பிரச்சினைகள் , இரத்துச் செய்வதாக அல்லது பதிலீடு செய்வதாக உறுதியளித்த பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளின் பிரச்சினை என்று தீர்வுகாணப்படாத வேறுபல பிச்சினைகளும் இருக்கின்றன.

இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் விவகாரத்தைக் கையாளுவதில், கடந்த காலத்தை மூடிமறைக்கப் போவதில்லை என்ற செய்தியை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்தியிருக்கிறது. கடந்த காலத்தில் இருந்து எழுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் வரிசைக் கிரமமாக அரசாங்கம் அணுகுமுறைகளைக் கடைப் பிடிக்கிறது என்பதற்கான. அறிகுறிகள் தெரிகின்றன.

அரசாங்கம் அவசரமான பல சவால்களை எதிர்நோக்குகிறது. போர்க்கால மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான அக்கறைகள் போன்ற சில பிரச்சினைகள் முன்னைய அரசாங்கங்களினால் விட்டுச் செல்லப்பட்டவை. ஏனைய பிரச்சினைகள் அரசாங்கம் பதவியேற்ற பின்னரான காலப் பகுதியில் அண்மையில் தோன்றியவை.

இந்த நெருக்கடிகளில் மிகுந்த தாக்கத்தைக் கொண்டவை ஒன்றும் அரசாங்கம் தானாக உருவாக்கிக் கொண்டவையல்ல. உலகளாவிய பொருளாதார உறுதிப்பாடின்மை இலங்கையை பெருமளவுக்கு பாதிக்கிறது. மத்திய கிழக்குப் போரின் விளைவாக உலகளாவிய ரீதியில் அத்தியாவசிய எரிபொருட்களுக்கும் பசளை வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அதிகரித்துக் கொண்டிருக்கும் எரிபொருள் விலைகளினால் இலங்கை பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த உலகளாவிய நெருக்குதல்கள் தோன்றுவதற்கு சில மாதங்கள் முன்னதாக இலங்கை காலநிலையுடன் தொடர்புடைய அதிர்ச்சிகளுக்கு முகங்கொடுத்தது. சூறாவளியின் விளைவாக பல மாவட்டங்கள் வெள்ளப் பெருக்கினாலும் மண் சரிவுகளினாலும் மோசமாகப் பாதிக்கப்பட்டன. அதனால் உயிரிழப்புகளும் சொத்து அழிவுகளும் வாழ்வாதார இழப்புகளும் ஏற்பட்டன.

அரசாங்கம் அதன் பதவிக்காலத்தின் தொடக்கத்தில் இருந்து பொருளாதார மீட்சிக்கும் பொருளாதாரத்துடன் தொடர்புடைய ஊழல்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கும் முன்னுரிமை கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியதைப் போன்று பேரியல் பொருளாதார (Macroeconomy) உறுதிப்பாட்டை மீண்டும் ஏற்படுத்துவதற்கும் கடன் சுமையின் பாதிப்புக்களை குறைப்பதற்கும் ஆட்சிமுறையை வலுப்படுத்துவதற்கும் இலங்கை மறுசீரமைப்புகளைத் தொடர வேண்டும்.

அரசாங்கம் அவசரமாகக் கையாள வேண்டிய பொருளாதாரப் பிரச்சினைகள் வடக்கு அல்லது தெற்கு என்று பிராந்திய வேறுபாடின்றி சனத்தொகையின் சகல பிரிவினர்களையும் பாதிக்கிறது. இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை பின்போட முடியாது.

ஆனால் கடந்த காலத்தைக் கையாளுதல், மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவது, அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவது போன்ற பிரச்சினகள் சிறுபான்மை இனத்தவர்களுக்கு ஆழமான முக்கியத்துவத்தைக் கொண்டவையாக இருக்கின்ற போதிலும், பெரும்பானமை இனத்தவரால் சமத்துவமான அளவுக்கு அனுபவிக்கப்படுபவை அல்ல. உண்மையில், மாகாணசபைகள் முறை சிறுபான்மை இனத்தவர்களின் அக்கறைகளை கவனிப்பதற்கும் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கும் என்று உருவாக்கப்பட்டது.

அரசியல் செயன்முறைகளின் ஊடாகக் கையாளா விட்டால் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகள் புதிய வடிவங்களில் வெளிக்கிளம்பவே செய்யும். அதனால், அந்த பிரச்சினைகள் அரசாங்கத்தின் உடனடி முன்னுரிமைக்கு உரியவையாக இல்லாவிட்டாலும் கூட, அவற்றுக்கு விரைவாகத் தீர்வு காணப்பட வேண்டியது அவசியமானதாகும். இனநெருக்கடியும் அதனால் தோற்றுவிக்கப்பட்ட மூன்று தசாப்த போரும் பொருளாதாரத்துக்கு பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தி துரித பொருளாதார அபிவிருத்திக்கான சகல வாய்ப்புக்களையும் குறைத்த தனியான ஒரு காரணியாகும் என்பதை மறந்துவிடக் கூடாது.

இலங்கையின் முன்னைய தலைவர்கள். சமாதானமாக பேச்சுவார்த்தைகளை நடத்தி தங்களின் வேறுபாடுகளுக்கு தீர்வைக் காணக்கூடியதாக இருந்திருக்குமானால், இலங்கை கிழக்கின் சுவிட்சர்லாந்தாக ' வரும் என்ற எதிர்வுகூறல்கள் பலித்திருக்கக்கூடும்.

நீண்டகால சமாதானத்தையும் நீதியையும் உறுதிப்படுத்தக்கூடிய ஒரு வழியில் கடந்தகால பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கான அரிதான ஒரு வாய்ப்பு இந்த அரசாங்கத்துக்கு இருக்கிறது. பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு இருக்கின்ற மூன்றில் இரண்டு பெரும்பானமைப் பலம் முக்கியமான சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கு அதற்கு அரசியலமைப்பு ரீதியான விசாலமான பரப்பைக் கொடுத்திருக்கிறது.

சொந்த நோக்கங்களுக்காக இனத்துவ தேசியவாத அடிப்படையில் அணிதிரட்டல்களைச் செய்த அல்லது தேவையான சீர்திருத்தங்களை முன்னெடுத்தால் அரசியல் ரீதியில் ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டிவரும் என்று கூடுதலாக அஞ்சிய முன்னைய பல அரசாங்கங்களைப் போலன்றி தற்போதைய அரசாங்கம் இன, மத சிறுபான்மைச் சமூகங்களை பெருமளவுக்கு அரவணைக்கின்ற அணுகுமுறையை வெளிக்காட்டுகிறது.

சர்வதேச அவதானிகள் குறிப்பிட்டதைப் போன்று அரசாங்கத்தின் மீதான பொதுமக்களின் நம்பிக்கை ஒப்பிட்டளவில் வலுவானதாகவே தொடர்ந்தும் இருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் கிறிஸ்ராலினி ஜோர்ஜீவா அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது அரசாங்கத்தின் மீதான பொதுமக்களின் நம்பிக்கை சீர்திருத்தங்களுக்கான வலுவான அத்திபாரமாக அமைவதால் இலங்கைம்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தார் என்பது கவனிக்கத்தக்கது.

பல தசாப்தங்களாக முன்னெடுக்கப்பட்ட ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சகவாழ்வு தொடர்பான பொதுப் போதனையும் நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது போன்று தெரிகிறது.

சில வேளைகளில் அரசாங்கத்தின் ஆதரவுடனும் பெரும்பாலும் அரசாங்கத்தின் எதிர்ப்புக்கு மத்தியிலும் சிவில் சமூக அமைப்புக்களினால் முன்னெடுக்கப்பட்ட இந்த போதனை, நீதியையும் நல்லிணக்கத்தையும் நோக்கிய அரசியல் சீர்திருத்தங்களுக்கான அத்திபாரமாக அமைந்தது. சிவில் சமூக முன் முயற்சிகள் இனங்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தை மற்றும் (17ம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீதரன் - சுமந்திரன் சமரசத்துக்கு தயார்! நிபந்தனைகளில் தொடர்ந்தும் கிடுகுப்பிடி!

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் சிறிதரன் சுமந்திரன் இடையே ஏற்பட்டிருந்த முரண்பாடுகள் காலவோட்டத்தில் இருவேறு அணிகளாக பிரிந்து நின்று பொதுவெளியில் பரஸ்பரம் பகிரங்க விமர்சனங்களை வெளிப்படுத்தும் அளவுக்கு மோசமான நிலைமையை அடைந்துள்ளன.

இந்த நிலைமையானது, அண்மைக் காலத்தில் தமிழரசுக் கட்சிக்கு ஆணை வழங்கிய வடக்கு, கிழக்கு மக்களிடையே பலத்த அதிருப்திகளையும், பெரும் சலிப்பையும் ஏற்படுத்தியுள்ளதோடு ஆளும் தேசிய மக்கள் சக்தியின் ஊடுருவல்களுக்கும் வழிவகுத்து வருகின்றது.

குறித்த சூழலை உணர்ந்துள்ள சிறிதரன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் அண்மைய நாட்களில் தமக்கு நெருக்கமானவர்களிடத்தில் மனந்திறந்து உரையாட ஆரம்பித்திருக்கின்றமையானது முக்கிய மாற்றமாகும்.

முன்னதாக 2015ஆம் ஆண்டு முதன்முதலாக தேர்தல் களம் கண்ட சுமந்திரன், வெற்றி பெறுவதற்காக சிறிதரனின் அறிவகம் அலுவலகத்துக்குப் படியேறிச் சென்ற போது, அங்கே சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன.

அதிலொன்று தான் கட்சியின் தலைமையை சிறிதரன் வகிப்பதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பதாகும். அதன் பின்னணியில் தான், அரசியல் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கத்துக்கு நிகராக சுமந்திரனை சிறிதரன் பொதுவெளியில் விழித்திருந்தார்.

அது மட்டுமன்றி தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் சிறிதரன், கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கு தயார் என்று அறிவித்தபோது சுமந்திரனும் அதனை வழிமொழிந்திருந்தார். அதனையடுத்து மன்னாரில் நடைபெற்ற மத்தியசெயற்குழுக் கூட்டத்தில் மறைந்த மாவை சேனாதிராஜாவின் 'கொதிப்பால்', சிறிதரன் அடுத்த ஐந்து வருடங்களுக்கு தலைமைப்பதவியை கோர மாட்டேன் என்று அறிவித்து விட்டார்.

இதனை அவதானித்த சுமந்திரன், பின்னரான காலத்தில் தலைப்பதவி போட்டியில் களமிறங்கினார். ஆனால், தனக்கு வாக்குறுதி அளித்த சுமந்திரன் தலைமைப்பதவிக்கு போட்டியிட்டமை சிறிதரனால் ஏற்றுக்கொள்ள முடிந்திருக்கவில்லை. இது தான் பிரச்சினையின் ஆரம்பம்.

அதன் பின்னர் கட்சித் தலைப்பதவிக்கான தேர்தல், சிறிதரன் வெற்றி பெற்றமை, மாவை சேனாதிராஜா மாநாட்டை ஒத்தி வைத்தமை, வழக்குக்கு தாக்கல் என்று நிலைமைகள் நாளுக்கு நாள் தீவிரமடைந்து இறுதியாக அரசியலமைப்பு பேரவையில் சிறிதரனின் செயற்பாடுகள் சம்பந்தமான விமர்னங்கள் அது பற்றி கேள்விகளுடன் கட்சியின் அதிகாரத்தை தன்வசம் வைத்திருந்த சுமந்திரன், பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியினை பறித்தமை வரை நிலைமைகள் பாரதூரமாகியுள்ளன.

இந்தச் சூழலுக்குள் வைத்தியர் சத்தியலிங்கத்தின் வவுனியா இல்லத்தில் நடைபெற்ற சிறிதரன், சுமந்திரன் இணக்கப்பாடுகளுக்கான உரையாடல்கள். கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் நடைபெற்ற உரையாடல்கள் அனைத்தும் 'சாண் ஏற முழம் சறுக்கும்' நிலையை கொண்டிருந்தன.

அதேநேரம் கட்சியின் தலைமைப் பொறுப்பை, தெரிவு செய்த தினத்திலிருந்து வழங்கியிருந்தால் கூட தற்போது அப்பதவிக்காலம் நிறைவடைந்திருக்கும் என்பது சிறிதரனின் தற்போதைய ஆதங்கமாக உள்ளது.

மேலும், சுமந்திரன், சாணக்கியன் இணை தற்போது கட்சியிலிருந்து தன்னை தானாக வெளியேறிச் செல்வதற்கான சகல சாத்தியமான நகர்வுகளை முன்னெடுப்பதாகவும் சிறிதரனுக்கும் அவர் சார்ந்தவர்களுக்கும்



விமர்சனங்கள் உள்ளன.

தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தர்மமே மறுபடியும் வெல்லும்' என்ற நம்பிக்கையுடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்சியிலிருந்து வெளியேறும் முடிவினை எடுப்பதில்லை என்பதில் உறுதியாக சிறிதரன் உள்ளார்.

இப்படியொரு பின்னணியில், சுயநல அரசியலைக் கடந்து ஒருமித்த இலக்கை நோக்கி ஒன்றிணைவோம் என்று கைதடி, நவபுரம், நவசன சமூக நிலையத்தின் அறுபத்தி ஓராம் ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய சிறிதரன் எம்.பி தெரிவித்திருக்கிறார்.

அது மட்டுமன்றி தனக்கு நெருக்கமானவர்களிடத்தில் நடுநிலையானவர்களின் பங்கேற்புடன் சுமந்திரனுடன் சமரசப் பேச்சுக்குத் தயார் என்ற சமிக்ஞையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

இப்படியிருக்க அண்மையில் சுமந்திரனும் பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பொன்றை நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பில் சமகால அரசியல் உரையாடல்களுக்குப் பின்னர் கட்சி முரண்பாடுகள் விசேடமாக சிறிரனுடன் நீடிக்கும் விடயங்கள் சம்பந்தமாக உரையாடப்பட்டன.

அச் சமயத்தில் சுமந்திரன் , உட்கட்சி முரண்பாடுகள் களையப்படுவது அவசியம் என்பதை ஏற்றுக் கொண்டதோடு சமரசரப் பேச்சுக்களுக்கு தயார் என்ற சமிக்ஞையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

நிலுவையில் உள்ள வழக்குகளை சிறிதரனின் இணக்கப்பாடுகளுடன் முடிவுக்கு கொண்டு வருவதற்கு தயாராக இருப்பதாக வெளிப்படுத்தியுள்ளார் அண்மைக் காலத்தில் சிறிதரன் தரப்பில் இடையீட்டு மனுதாரர்கள் உட்புகுத்தப்படுகின்றது என்பது அவரது ஆதங்கமாக உள்ளது.

அதேநேரம் கட்சியினதும், எதிர்கால அரசியல் முன்னெடுப்புக்கள் தொடர்பில் சில நிபந்தனைகள் அவரிடத்தில் காணப்படுகின்றமையை உணர முடிகின்றது. அதாவது கட்சியின் முக்கிய பொறுப்பை சிறிதரனிடத்தில் ஒப்படைப்பதில் சிறு தயக்கம் காணப்படுகின்றது.

அந்த தயக்கத்துக்கு காரணம், அரசியலமைப்பு பேரவையில் சிறிதரன் தனது செயற்பாடுகள் சம்பந்தமாக காணப்படுகின்ற விமர்சனங்களுக்கும், சந்தேகங்களுக்கும் முறையான பதிலளிக்கப்படாமையாகும். மேலும், மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்படுமாக இருந்தால், சிறிதரன் முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்கினால் அவரது வெற்றிக்காக தேர்தல் கள முன்னரங்கில் பணியாற்றுவதற்கு தான் தயாராக இருப்பதாகவும் கூறுவதோடு, சிறிதரன் தான் வெற்றி பெறுவதற்கும் ஆட்சியை கைப்பற்றுவதற்குமான பொருத்தமான வேட்பாளர் என்பதையும் ஏற்றுக் கொள்கின்றார்.

சிறிதரன் முதலமைச்சராக களமிறங்குவதற்கு தயங்கினால் தானே முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்குவேன் என்றும் அவர் உறுதியாக கூறுவதோடு, சிறிதரனின் ஒத்துழைப்பு எவ்வளவு தூரம் இருக்கும் என்பது கேள்விக்குறியாகும் என்றும் குறிப்பிடுகின்றார்.

சிறிதரனைப் பொறுத்த வரையில், முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்குவதாக இருந்தால் கட்சியின் தலைமைப் பொறுப்பு அவரிடத்தில் கையளிக்கப்பட வேண்டும் என்பது ஆகக்குறைந்த கோரிக்கையாக உள்ளது. ஆனால், சுமந்திரன் தரப்பின் தற்போது அதற்கான சாதகமான வெளிப்படுத்தல்கள் இல்லை.

இதேநேரம், இருவரும் சமரசமான பேச்சு மேசைக்கு வருவதற்கு சமிக்ஞை வெளியிட்டிருக்கின்றனர். அடுத்து அப்பேச்சு மேசையில் நடுநிலையாளர்களாக இருக்கப் போவது யார் என்பது தான் இப்போதைய கேள்வியாகின்றது.

ஊடகத்தரப்பினர் இதற்கான பங்களிப்பை வழங்குவதற்கு தயாராக இருப்பதாக அறிவித்துள்ளதுள்ளமை முதலாவது முன்னேற்றமாகும். அடுத்து நடுநிலையான புத்திஜீவிகள், சமத் தலைவர்கள் தலையீடு செய்வார்களாக இருந்தால் மாற்றங்கள் வெகுவிரைவில் நிகழலாம்.

அதேநேரம் பிறந்த தின வாழ்த்துக்களை பகிர்வதற்கான உரையாடுகின்ற நீங்கள் இருவரும், மூன்றாவது நபரின் தலையீடுகள் இன்றி தனியே அமர்ந்திருந்து மனந்திறந்து உரையாடினால் பிரச்சினைகள் சமூகமாக முடிவுக்கு வந்துவிடுமே என்று ஒரு ஊடகவியலாளர் சுமந்திரனை கேட்டபோது அதற்கு அவருடைய புன்னகையே பதிலாக இருந்தது.

# கடந்த காலப் பிரச்சனைகளைக் கையாள்வதற்கு முன்வரும் அரசாங்கம்

(16ம் பக்கத் தொடர்ச்சி) உரிமைகளுக்கான ஆதரவுப் பிரசாரம் ஆகியவை அதிகாரப் பகிர்வு, சமஷ்டி முறை மற்றும் போர்க் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் போன்ற சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் பற்றி பொதுமக்கள் மத்தியில் பெருமளவுக்கு விளக்கத்தை ஏற்படுத்துவதற்கு பங்களிப்பைச் செய்திருக்கின்ற

சந்திரகாசனின் அமைப்பு குறித்து தெரிவித்த பாராட்டை அரசாங்கம் நாட்டில் இனங்கள், மதங்களுக்கு இடையில் நிலவும் நம்பிக்கையின்மையை இல்லாமல் செய்வதற்கும் சமூக ஒருங்கிணைவை ஏற்படுவதற்கும் தங்களை அர்ப்பணித்திருக்கும் ஏனைய அரசாங்க சார்பற்ற தொண்டர் அமைப்புகளுக்கும் விரிவுபடுத்தினால் நன்றாக இருக்கும்.

நெருக்குதல்கள் தொடர்ந்து வளர்ந்து வந்தாலும் கூட, அநாவசியமான தாமதமின்றி நல்லிணக்கத்தில் ஈடுபட வேண்டியது அரசாங்கத்துக்கு ஒரு சவாலாக இருக்கிறது. ஒவ்வொன்றாக நடவடிக்கைகளை எடுப்பது அவசியமானதே.

ஆனால், காலவரையறையற்ற ஒத்தி வைப்பு ஆபத்தைக் கொண்டு வரும். மோதல் தீர்வுக்கான இந்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தத் தவறினால் இன்னொரு சந்தர்ப்பம் மீண்டும் கிடைப்பதற்கு நீண்டகாலம் எடுக்கக் கூடும்.

அதனால் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, இலங்கை தொடர்ந்தும் பலவீனமான செயற்பாடுகளையே வெளிக்காட்டி, (பகிரங்கமான போர் இல்லாவிட்டாலும்) தீர்வு காணப்படாத பிரச்சினைகளுடன் கூடிய, இனரீதியாகப் பிளவுபட்ட ஒரு நாடாகவே தொடர்ந்தும் இருக்க வேண்டிவரலாம்

அதனால் இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பில் அரசாங்கம் அண்மையில் தெரிவித்த கருத்து மிகவும் முக்கியமானது. அவசரமான பொருளாதார மற்றும் உலகளாவிய சவால்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற போதிலும் கூட அரசாங்கம் கடந்த காலத்தை மறந்து விடவில்லை என்பதை இது காட்டுகிறது.

இலங்கை அதன் சகல மக்களுக்கும் உறுதியானதும் நீதியானதுமான எதிர்காலத்தைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய முறையில் கடந்த காலத்தைக் கையாளுவதற்கான ஆணையையும் ஆற்றலையுமுடைய அரசாங்கம் ஒன்றைக் கொண்டிருக்கிறது.

# எந்தச் செய்தியையும் முந்தித் தரும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 33வது ஆண்டு விழா அரங்கு நிறைந்த மக்களுடன் “ஏழிசைக்கீதங்கள்” 2025

எங்கள் அன்பான அழைப்பையேற்று உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 33வது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு தாயகத்து வேர்களும் கனடிய விழுதுகளும் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றிய - ஈழத்தில் இருந்து வருகை தந்த தமிழீழத்தின் தலைசிறந்த பேச்சாளர் தமிழருவி சிவகுமாரன் அவர்களுக்கும் தமிழகத்தில் இருந்து வருகை தந்து விழாவை ஏழிசைக்கீதங்கள் இசை நிகழ்ச்சி மூலம் சிறப்பித்த தென்னிந்திய பிரபல திரைப்படப் பாடகரும் கர்நாடக இசைக்கலைஞருமான சத்தியப் பிரகாஷ் அவர்களுக்கும் அவருக்கு பக்கவாத்திய இசை வழங்கிய பக்கவாத்தியக் கலைஞர்களுக்கும் குறித்த நேரத்திற்கு வருகை தந்து அரங்கு நிறைந்த மக்களாகத் திரண்டு வந்து இந்நிகழ்வைச் சிறப்பித்த என் இனிய வாசகர்களுக்கும் கலா ரசிகர்களுக்கும் மற்றும் அனைத்து வகையிலும் உதவிகள் ஒத்தாசைகள் வழங்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் குறிப்பாக அனுசரனை வழங்கிய வர்த்தகப் பெரு மக்களுக்கும் ஊடகத்துறை நண்பர்களுக்கும் என் இதயத்தால் - நெஞ்சத்தால் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

புகைப்படத்தில் அரங்கத்தில் விழாவை சிறப்புறத் தொகுத்து வழங்கிய இனிய நண்பர் ஞானபண்டிதர் அவர்களையும் இறைவணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து, கனடிய தேசியகீதம் இசைத்த செல்விகள் சஷ்மியா சசிகரன், சர்மியா சசிகரன் ஆகியோரையும் தமிழ்ஈழத்தேசியகீதம் இசைத்த இனப்பற்றாளர் சோம.சச்சிதானந்தன் அவர்களையும் வரவேற்புரை நிகழ்த்திய திருமதி தாட்சாயினி பிறின்ஸ் அவர்களையும் காண்கிறீர்கள். அத்துடன் சிறப்புரையாற்றிய தமிழருவி சிவகுமாரன், ஏழிசைக்கீதம் இசைத்த சத்தியப்பிரகாஷ் அவர்களுடன் கனடாவின் முன்னணி இசைக்கலைஞர்கள் T.K.பரமேஸ்வரன் - ஆசிரியர் ஈழநாடு
















# எந்தச் செய்தியையும் முந்தித் தரும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 33வது ஆண்டு விழா அரங்கு நிறைந்த மக்களுடன் "ஏழிசைக்கீதங்கள்" 2025

21 மார்ச் 2026 சனிக்கிழமை நடைபெற்ற உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 33வது ஆண்டு விழாவில் வழமை போன்று தமிழ்ச்சமூகத்தில் மதிப்பார்ந்தவர்களுக்கும் 25 ஆண்டுகளுக்கு மேலாக வர்த்தக மற்றும் வியாபாரத்தில் நிலைத்து நின்று மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்களுக்கும் கௌரவம் வழங்கி மதிப்பளிப்பது வழமையாகும். அந்த வகையில் இவ் வாண்டு தாயகம் முதல் கனடா வரை தமிழ்ப்பணி சமூகப்பணியை பகுத்தறி வோடு தங்கு தடையின்றிச் செய்து வரும் ஆசிரியை மதிப்புமிகு திருமதி யோகரத்தினம் செல்லையா அவர்களுக்கு ஈழநாடு பத்திரிகை தமிழ்சசமூகப் பற்றாளர் எனும் கௌரவம் வழங்கி வாழ்த்தியது.

அதே போன்று மீன்பாடும் தேனாடு மட்டக்களப்பு கல்முனையைச் சேர்ந்த திரு விசு கணபதிப்பிள்ளை அவர்கள் தாயகத்தில் வாழ்ந்த காலத்தில் இரு ந்தே பொது வாழ்வையும் பொதுப்பணியையும் தன் கடமையென எண்ணி உழைத்து வருபவர். கனடாவுக்கு புலம்பெயர்ந்து வந்து 30 ஆண்டுகளுக்கு மேலாக உதவும் பொற்கரங்கள் என்ற அமைப்பை உருவாக்கி தாயகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தன்னாலான உதவிகளை செய்து வருபவர். இனப்பற்றும் தேசப்பற்றும் நிறைந்த திரு விவு கணபதிப்பிள்ளை அவர்களின் சேவையைப் பாராட்டி கௌரவம் வழங்கப்பட்டது.

வர்த்தகத்துறையில் 25 ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாக சேவையாற்றி வரும் மூவர் கௌரவம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

ராஜ் என்று அன்பாக அழைக்கப்படும் திரு ராஜ் சுப்ராஜும் அவர்கள் இலங்கையில் இருந்து கனடாவுக்குப் புலம்பெயர்ந்த சில வருடங்களிலேயே காலத்தின் தேவையறிந்து வீட்டு அடமானக்கடன் அதாவது மோட்கேஜ் முகவராகத் தன் பணிகளை ஆரம்பித்தார். மிகக் குறுகிய காலத்திலேயே நிதி முதலீடு ஆலோசகராகவும் நிகழ்ந்து சாதனையாளர் என்ற உயர்ந்த ராஜ் அவர்கள் தமிழ்சமூகத்தின் மேம்பாட்டிற்கும் தாயகத்தில் இன்னலுறும் மக்களுக்கும் தன்னால் முடிந்தளவு உதவிகளை அமைதியான முறையில் செய்து வரும் அவரை ஈழநாடு பத்திரிகை கௌரவம் வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றது.

யூட் என்று அன்பாக அழைக்கப்படும் திரு யூட் ஞானேந்திரன் அவர்கள் கனடாவுக்கு புலம்பெயர்ந்த ஆரம்ப காலங்களில் சாதாரணமாக ஓர் வேலை யைப் பார்த்துக் கொண்டிருந்த அவருக்கு 25 வருடங்களுக்கு முன் இறைவனுடைய ஆசீர்வாதமும் பெரியோர்களது நட்பும் அவரை ஓர் நம்பகத்தன்மை நிறைந்த வீட்டு அடமானக்கடன் முகவராக மாற்றியது. செய்யும் தொழிலே தெய்வம் என்று கருதி அவர் உழைத்த உழைப்பு அவரை வீடு விற்பனை முகவராகவும் உயர்த்தியது. தாயகத்தில் இன்னலுறும் மக்களுக்கும் தன்னால் முடிந்தளவு உதவிகளை அமைதியான முறையில் செய்து வரும் அவரை ஈழநாடு பத்திரிகை கௌரவம் வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றது.

தனம் அண்ணா என்று அன்பாக அழைக்கப்படும் தனம் கனகரெத்தினம் அவர்கள் இலங்கையில் கணக்காளராகத் திகழ்ந்தவர். கனடாவுக்கு வந்த பின்னர் வங்கித்துறையில் பணியாற்றத் தொடங்கி இன்று வரை அப் பணியையும் தள்ளி வைக்காது தொடர்வதுடன் வருமானவரி அதாவது Tax Service இல் தனியார் மற்றும் வர்த்தக வருமானவரி தயாரிப்பில் 30 வருடங்களுக்கு மேலாக பல்லின மக்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றவர். அமைதியும் நேர்மையும் நிரம்பிய தனம் அவர்கள் ஓர் சிறந்த மேடைப் பாடகருமாவார். அத்தகைய ஒருவரை ஈழநாடு பத்திரிகை கௌரவம் வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றது.













# வட்டுக் கோட்டைக் கோசம் - 50 ஆண்டுகள்!



யதீந்திரா

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன்வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணியே பின்னர் அதிலிருந்து விலகி விட்டது. ஏன் அவ்வாறு விலகியது? ஒன்று அது ஒரு தேர்தல் கவர்சிக்காக முன்வைக்கப்பட்ட கோசமாக இருந்திருக்கவேண்டும் அல்லது தாங்கள் பொருத்தமற்ற கோசமொன்றை முன் வைத்துவிட்டோம் என்றுஅவர்கள் கருதியிருக்கவேண்டும். ஏனெனில் தங்களுடைய நிலைப்பாடு உன்னதமானது தான் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கருதியிருந்தால், எதுவே நடக்காததுபோன்று, சாதாரணமாக மாவட்டசபையை நோக்கி இறங்கியிருக்க மாட்டார்கள். இது அடிப்படையிலேயே செல்வநாயகத்தின் சிந்தனைப் பள்ளியின் அணுகுமுறையாகத்தான் புரிந்துகொள்ள வேண்டும் -அதாவது கேக் கிடைக்கவில்லை என்பதற்காக பாணை நிராகரிக்காதீர்கள் - என்னும் அணுகுமுறை. கேக்கை கேட்டுப் பார்ப்போம் ஆனால் பாண் தான் கிடைக்கின்றது என்றால் அதனை நிராகரிக்கக் கூடாது. இந்த அடிப்படையில்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டையிலிருந்து மாவட்டசபைக்கு இறங்கியது. இது உண்மையில் துரோகம் இல்லைமாறாக அவர்களதுஅரசியல் அணுகுமுறை. இதனை சரிவரப் புரிந்துகொள்ளாத இளைஞர்கள் அதனை உண்மையென்று நம்பி பல இயக்கங்களாக அணிவகுத்தனர். அன்றைய கூட்டணியின் அணுகுமுறையின் தொடர்ச்சிதான் இன்றும் தேர்தல் என்றவுடன் சில கோசங்களை முன்வைப்பதும், பின்னர் அவ்வாறானதொரு கோரிக்கையை, நாங்களாமுன்வைத்தோம் -என்பது போல், சம்மந்தமில்லாமல் இருப்பதையும் ஒப்பிட்டுக் கொள்ள லாம். இதுபற்றி இன்றைய இளைய தலைமுறை இனியாவது சிந்திக்கவேண் டும்.

இந்த ஐம்பதுஆண்டுகளை திரும்பிப் பார்த்தால் ஒரு வேளை இந்தப் போராட்டமே நடந்திருக்காவிட்டால், ஈழத் தமிழ் மக்கள் முக்கியமாகஏழைத் தமிழ் மக்கள் சிறப்பானதொருவாழ்வில் இருந்திருப்பார்களோ என்னும் கேள்வி எழுவது தவிர்க்கமுடியாதது-ஏனெனில் இந்த ஐம்பதுஆண்டுகளில் வடக்குகிழக்கில் எவ்வாறானசாதகமானஅரசியல் விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. வடக்குகிழக்கில் தமிழ் மக்களின் இருப்பை பலப்படுத்துவதில் ஜனநாயக அரசியலும் சரி, ஆயுதப் போராட்டமும் சரி, சாதகமான பங்களிப்பை வழங்கவில்லை.

இது தொடர்பில் எவ்வித விசாரணைகளும் இன்றி, மீண்டும் வட்டுக்கோட்டைத் தீர்மானம் தொடர்பில் பேசுவதும், அதுதொடர்பில் பிரகடனங்களை மேற்கொள்வதும் எந்தவகையில் நேர்மையானது. சிலவருடங்களுக்குமுன்னர் தமிழ் நாட்டில் வாழ்ந்துவரும் காசிஆனந்தன் என்பவர் திடிரென்று, இரண்டாம் வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்று ஒரு நகைச்சுவைக் கதையை முன்வைத்திருந்தார். இதனைகண்டிக்கவேண்டியதமிழ் கட்சிகளோ, புத்திஜீவிகளோ தலையாட்டிக் கொண்டிருந்தனர். இப்போதுமீண்டும் ஒரு குழு வட்டுக்கோட்டைத் தீர்மானம் தொடர்பில் முகம் காட்டமுற்படுகின்றது. இப்போதும் வழமைபோல் தமிழ் கட்சிகள், புத்திஜீவிகள் என்போர் பொம்மைகளாகவே இருக்கின்றனர்.

எந்தவொரு விடயத்தை பற்றிபேசுவதற்குமுன்னர் முதலில் நமது அரசியல் தகுதிநிலை தொடர்பில் சிந்திக்கவேண்டும்.நமது தகுதிநிலை அறிந்தால் தான் மற்றவர்களுக்கு முன்னால் நாம் என்ன நிலையில் இருக்கின்றோம் என்பதைப் புரிந்துகொள்ளமுடியும். ஆனால் தமிழ் அரசியல் சூழலில் இடம்பெறும் உரையாடல்களில் இந்த இரண்டையும் காணவில்லை. எவர் எதனை குறிப்பிட்டாலும் அதுதொடர்பில் கேள்விகளை முன்வைக்காமல் தலையாட்டும் போக்கேமேலோங்கிக் காணப்படுகின்றது. அதனையே அறிவு பூர்வமான நிலைப்பாடுஎன்று கூறிக் கொள்வதுதான் இன்னும் மோசமானது.

இன்று தமிழர் அரசியல் இருக்கும் நிலைமையையும், அன்றிருந்த நிலைமையையும் சிறிதுநோக்குவோம்.ஒப்பீட்டடிப்படையில் அன்றைய அரசியல் சூழலில் தமிழருக்கு ஒரு குரல் இருந்தது. செல்வநாயகம் சரியோ பிழையோ தென்னிலங்கையுடன் பேசக் கூடிய ஒருவராக இருந்தார். அவருடன் உடன்பட்டார்களோஅல்லது இல்லையோ தமிழர்களின் தலைவர்கள் என்னு மடிப்படையில் அவர்கள் மதிக்கப்பட்டனர். அதன் பின்னர் அமிர்தலிங்கம் இந்தியப் பிரதமரோடு பேசக் கூடிய ஒருவராக இருந்தார். இந்தியாவில் மதிக்கப்பட்டார்.தென்னிலங்கையும் அமிர்தலிங்கத்தை உற்றுநோக்கியது. அவ்வாறானதொரு சூழலில் கூட சில விடயங்களை வெற்றி கொள்ளமுடியவில்லை. ஏன்? ஏனெனில் தென்னிலங்கைக்கு நிர்பந்தத்தை கொடுக்கக் கூடிய அரசியல் பலத்துடன் அவர்கள் இருக்கவில்லை- இருக்கமுடியவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் தான் ஆயுதப் போராட்டம் ஈழத் தமிழர்களின் பேரம் பேசுவதற்கானது ருப்புச் சீட்டானது. அதன் சரி பிழைகளை ஒருபக்கமாக வைத்துவிட்டு நோக்கினால் தமிழ் இளைஞர்களின் ஆயுத ரீதியான எழுச்சி தென்னிலங்கைக்கு ஒரு நெருக்கடியாக மாறியது. அதுவே பின்னர் இந்தியத் தலையீட்டுக்கான வாய்ப்பை ஏற்படுத்தியது. இந்தியா அதன் நலன்களில் இருந்துதான் தலையிட்டது.ஒரு பிராந்திய சக்தி அவ்வாறுதான் தலையிடும். பலமான நாடுகளின் தீர்மானங்கள் தொண்டுமனோ நிலையிலிருந்து பிறப்பதில்லை. அவ்வாறு எவரேனும் நம்பினால் அவர்களுக்கு அரசியல் அரிச்சுவடியே தெரியாது என்றுபொருள்.குறிப்பாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் வெளிவிவகாரக் கொள்கையின் விளைவாகவே இந்தியாவின் அன்றையநேரடித் தலையீடு நிகழ்ந்தது. அன்றைய உலக அரசியல் நிலைமையும் அதற்கான சூழலை வேகமாகக் கனியச் செய்திருந்தது. ஆனால் ஒரு மூன்றாம் தரப்பின் தலையீடு நிகழ்ந்த போதும் கூட, அதனை உச்சபட்டசமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை, தமிழ் அரசியல் தலைமைகள் தவறுவிட்டன.

இந்தியாவின் நேரடியான தலையீடு தோல்வியுற்ற பின்னரான அரசியல் காலகட்டம் என்பது முற்றிலுமாக விடுதலைப் புலிகள் அமைப்பின் காலகட்டம் மட்டுமே. இந்தக் காலத்தில்,புலிகள் அவர்களது நகர்வில் வெற்றிபெற்றிருந்தால் அந்தவெற்றிக்கு அவர்கள் மட்டும் தான் காரணம். ஆனால் அவர்களது அனைத்து முயற்சிகளும் இறுதியில் தோல்வியிலேயே முடிவுற்றது. இப்போது அந்தத் தோல்விக்கு வேறு ஒருவர் மீது விரல் நீட்டமுடியாது அல்லவா!

வட்டுக்கோட்டைத் தீமானத்தின் ஐம்பது ஆண்டுகள் என்பதை எவ்வாறு புரிந்துகொள்ளவேண்டும்? ஜனநாயக வழியிலான போராட்டம், ஆயுத வழியிலான போராட்டம்,போர்த் தோல்விக்கு பின்னரான நீதிதேடும் செயல்பாடுகள், சர்வதேசத்தைநோக்கியகோசங்கள் - அனைத்தும் தோல்வியில் முடிவுற்றிருக்கும் ஐந்து தசாப்தங்களை நாம் கடந்திருக்கின்றோம். இது தொடர்பில் எவ்வித பரிசீலனையும் இன்றி, மீண்டும் நாம் வட்டுக்கோட்டைத் தீர்மானம் தொடர்பில் பேசலாமா?

இந்த இடத்தில் தான் நான் மேலே குறிப்பிட்ட அரசியல் தகுதிநிலை என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டியிருக்கின்றது. அரசியலில் ஒன்றை அடைய வேண்டும் என்றால் மற்றவர்களுடன் பேரம் பேசுவதற்கான பலம் நமக்கு இருக்கவேண்டும்.அவ்வாறுபேரம் பேசாமல் ஒன்றைபெறவேண்டும் என்றால் அதுமற்றவர்களின் கருணையினால் மட்டுமே நிகழமுடியும். சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் தரப்புக்கள் கோரும் ஒரு அரசியல் தீர்வை நிராகரிக்கின்றனர்.ஆட்சிக்கு வருவ தற்கு முன்னர் சில விட யங்களை செய்வதாகக் கூறுகின்றனர் ஆனால் வந்தவுடன் அதனை புறம் தள்ளுகின்றனர். இதுதான் தென்னிலங்கை அரசியலின் வாழையடிவாழையாகத் தொடர்கின்றது. அவர்கள் தரமறுப்பதை நாங் கள் பெறஎன்ன வழி? ஒன்றில் பலம் இருக்க வேண்டும் அல்லதுஒரு மூன்றாம் தரப்பு நமக் காக களத்தில் நிற்கவேண் டும். அதுவும் சாத்தியமில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. இந்தநிலையில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் உச்சரித்துவிட்டு, கைவிடப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானம் பற்றிபேசுவ தால் சிங்கள ஆட்சியாளர்களுக்கு எவ்வாறான நிர்பந்தத்தை வழங்கமுடியும்?

இந்த ஐம்பது வருடங்களை திரும்பிப் பார்த்தால் ஈழத் தமிழர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை என்றில்லை- கிடைத்தது ஆனால் அதனை திறம்பட, புத்திசாதுர்யமாக கையாளுவதில் தமிழ் தலைமைகள் என்போரால் வெற்றி பெறமுடியவில்லை. இதனால்தான் ஐம்பது ஆண்டுகள் என்பதுதோல்வியின் ஆண்டுகளாக இருக்கின்றன. இனியும் தொடர்ந்தும் தோல்வியின் பாதையில் பயணிப்பதா அல்லது கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் உச்சபட்சமாக பயன்படுத்திக் கொண்டு, புதிய வாய்ப்புக்களை கையாளும் தகுதியை வளர்த்துக் கொள்வதா? காலம் எப்போதும் ஒரேநேர் கோட்டியில் பயணிப்பதில்லை. ஆனால் அந்தகாலவோட்டத்தோடுஒத்தோடுவதற்குசதாதங்களைதயார் செய்து கொண்டிருக்கும் தலைமைஅவசியம். ●



“இந்த ஐம்பது வருடங்களை திரும்பிப் பார்த்தால் ஈழத் தமிழர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை என்றில்லை - கிடைத்தது ஆனால் அதனை திறம்பட, புத்திசாதுர்யமாக கையாளுவதில் தமிழ் தலைமைகள் என்போரால் வெற்றிபெற முடியவில்லை. இதனால்தான் ஐம்பது ஆண்டுகள் என்பது தோல்வியின் ஆண்டுகளாக இருக்கின்றன.”

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை முல்லைத்தீவு புனிதபூமி
அன்பு இல்லக் குழந்தைகளுக்காக 15வது ஆண்டாக நடாத்தும்
இன்னிசைநிகழ்வும் இராப்போசன விருந்தும் எதிர்வரும் 05 டிசம்பர் 2026 சனிக்கிழமை

# அமெரிக்கா - ரஷ்யா - சீனா
# ஈரான் போரால் யாருக்கு வெற்றி? யாருக்கு தோல்வி?

யார்க்ஷயரில் உள்ள வீடுகளுக்கான வெப்பமூட்டும் எண்ணெய் கட்டண உயர்வு முதல், பாகிஸ்தானில் மின் கட்டணத்தைச் சேமிப்பதற்காகப் பள்ளிகள் மூடப்பட்டது வரை மத்திய கிழக்குப் போரின் நிதி ரீதியான பாதிப்புகள் ஏற்கனவே கடுமையாக உணரப்படுகின்றன.

கடுமையாகப் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளவர்களின் நீண்ட பட்டியலுக்கு இணையாக, இதிலிருந்து பயனடைபவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் யார்?

### வெற்றியாளர்கள்

### கனடா - ரஷ்யா - நோர்வே

புதுப்பிக்கத்தக்க ஆற்றலை பயன்படுத்த அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்ட போதிலும், நாம் இப்போதும் எண்ணெய் மற்றும் எரிவாயுவையே பெரிதும் நம்பியுள்ளோம். அதிக அளவு எண்ணெய் இருப்புகள் உள்ள நாடுகள் பெரிய செல்வத்தை பெறலாம். அதனால்தான் கச்சா எண்ணெய் `கருப்பு தங்கம்` என்று அழைக்கப்படுகிறது. விலைகள் உயரும் போது, உற்பத்தியாளர்கள் பொதுவாக லாபமடைகிறார்கள். அதே நேரத்தில் பயனர்கள் நஷ்டமடைகிறார்கள்.

மத்திய கிழக்கு எண்ணெய் வழங்கலின் மையம். ஹோர்மூஸ் நீரிணை அதன் முக்கிய பாதை ஆகும்.

ஹோர்மூஸ் நீரிணையை இரான் கிட்டதட்ட மூடியது மட்டுமல்லாமல், வளைகுடாவில் உள்ள அமெரிக்க கூட்டாளி நாடுகளின் எரிசக்தி உள்கட்டமைப்புகளையும் தாக்கியது. இது கத்தார் மற்றும் சௌதி அரேபியா போன்ற உற்பத்தியாளர்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது.

வாடிக்கையாளர்கள் மாற்று ஆதாரங்களைத் தேடுவதால், நார்வே மற்றும் கனடா போன்ற நாடுகள் பயனடையக் கூடும்.





2022இல் ரஷ்யா யுக்ரேன் மீது படையெடுத்த பிறகு, பல நாடுகள் ரஷ்ய எரிவாயுவைச் சார்ந்திருப்பதைத் தவிர்க்க முயன்ற போது, நார்வே உற்பத்தியை அதிகரித்து அதைப் பயன்படுத்திக் கொண்டது.

இதற்கிடையில் கனடாவின் எரிசக்தி அமைச்சர் டிம் ஹோட்சன் தனது நாட்டை ஒரு நிலையான, நம்பகமான, கணிக்கக்கூடிய, மதிப்புகள் அடிப்படையிலான எரிசக்தி உற்பத்தியாளர்` என்று விரைவாக நிலைநிறுத்தினார். ஆனால் உற்பத்தியை எவ்வளவு உயர்த்த முடியும் என்ற கேள்விகள் உள்ளன.

டிம் ஹோட்சன் கனடா வணிகத்திற்குத் தயாராக உள்ளது என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். ஆனால் உற்பத்தியை உயர்த்தும் அதன் திறன் குறித்துக் கேள்விகள் உள்ளன மாறாக, ரஷ்யாவே இதில் மிகப்பெரிய வெற்றியாளராக இருக்கக்கூடும். உலகளாவிய விநியோக நெருக்கடியைத் தணிக்க அமெரிக்கா விதிகளைத் தளர்த்தியுள்ளதால், இந்தியாவிற்கான ரஷ்யாவின் கச்சா எண்ணெய் விற்பனை 50வீதம் அதிகரித்துள்ளது.

சில மதிப்பீடுகளின்படி மார்ச் இறுதிக்குள் ரஷ்யா கூடுதலாக 5 பில்லியன் டாலர் வரை ஈட்டக்கூடும். மேலும் 2022-க்குப் பிறகு எரிபொருள் தொடர்பான வருவாயில் இது அதன் மிகப்பெரிய ஆண்டாக அமையக் கூடும்.

வளைகுடா நாடுகளின் இழப்பில் ரஷ்யாவுக்கு ஒரு பெரிய லாபத்தை அமெரிக்கா வழங்கும் அபாயம் உள்ளது. மற்ற சாத்தியமான வெற்றியாளர்களும் உள்ளனர். சில நாடுகள் நிலக்கரி பயன்பாட்டை அதிகரிப்பதால், அந்த எரிபொருளின் விலையும் உயருவது இந்தோனீசியா போன்ற பெரிய ஏற்றுமதியாளர்களுக்கு ஒரு சிறந்த வாய்ப்பாக அமைகிறது.

மோதல் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி அடைக்கப்பட்டுள்ளதால் மத்திய கிழக்கில் உள்ள எண்ணெய் உற்பத்தியாளர்கள் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டுள்ளனர்.

### தோல்வியாளர்கள்:-

### அமெரிக்கா பிரிட்டன் - ஐரோப்பா

அமெரிக்காவைப் பொறுத்தவரை நிலைமை என்ன? எண்ணெய் விலை உயரும் போது அமெரிக்கா `நிறைய பணம் சம்பாதிப்பதாக` அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறுகிறார்.

நிச்சயமாக, கச்சா எண்ணெய் விலைகள் தற்போதைய அளவிலேயே நீடித்தால், அமெரிக்க எண்ணெய் உற்பத்தியாளர்கள் இந்த ஆண்டு பல்லாயிரம் கோடி டாலர்கள் கூடுதல் வருவாயைப் பெறக்கூடும். ஆனால் அது அமெரிக்காவை ஒரு நிகர வெற்றியாளராக மாற்றாது. முதலாவதாக, சில உற்பத்தியாளர்கள் மத்திய கிழக்கின் சீர்குலைவுகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். உதாரணமாக, எக்ஸான் மொபில் நிறுவனம் கத்தாரின் ராஸ் லாஃபன் தொழில் மையத்தில் தனது செயல்பாடுகளைக் கொண்டுள்ளது. அங்கு மார்ச் தொடக்கத்தில் இருந்து உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் இரானிய ஏவுகணைத் தாக்குதல்களால் `பரந்த சேதம்` ஏற்பட்டுள்ளது.

இரண்டாவதாக, மொத்த விற்பனை விலைகள் குறைந்து வந்ததால் பல ஆண்டுகளாகத் திறனைக் குறைத்துக் கொண்ட பல ஷேல் உற்பத்தியாளர்களால் (பாறைகளில் இருந்து எண்ணெய் எடுக்கும் நிறுவனங்கள்) உற்பத்தியை விரைவாக அதிகரிக்க முடியாது.

மிக முக்கியமாக தனிநபர் அடிப்படையில், அமெரிக்கர்கள் இந்த உலகில் எண்ணெய் மற்றும் எரிவாயுவை அதிகமாகப் பயன்படுத்துபவர்கள் ஆவர். கடுமையான மிட்வெஸ்ட் குளிர்காலங்களில் வெப்பமூட்டும் வசதிகளைப் பயன்படுத்துவது முதல், வாகனப் போக்குவரத்து வரை அவர்கள் புதைபடிவ எரிபொருட்களின் ஏற்ற இறக்கமான விலைகளால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

எண்ணெய் விலைகள் 140 டாலராக உயர்ந்து அங்கேயே நீடித்தால், பொருளாதாரம் சுருங்கும் அபாயம் இருப்பதாக ஆக்ஸ்போர்டு எகனாமிக்ஸ் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

நிச்சயமாக, அந்தப் பாதிப்பில் அமெரிக்கர்கள் மட்டும் தனியாக இல்லை. குறிப்பாக இறக்குமதி செய்யப்படும் எரிவாயுவை ஐரோப்பிய நுகர்வோர் சார்ந்திருப்பது வளர்ச்சியில் அதிக ஆபத்தை ஏற்படுத்தும். கடந்த சில வாரங்களாகச் சந்தையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், உரங்கள் விலை உயர்வு மற்றும் கப்பல் போக்குவரத்து செலவுகளில் எதிரொலிக்கும் என்பதால், இந்த நிலை நீடித்தால் ஆண்டின் பிற்பகுதியில் பணவீக்கம் சுமார் 0.5வீதம் அதிகரிக்கக்கூடும்.

நல்ல செய்தி என்னவென்றால், பல ஆண்டுகளாக எரிசக்தியை சிக்கனமாக பயன்படுத்துவதன் மூலம், மேற்கத்திய நாடுகள் பொதுவாகக் கடந்த காலத்தை விட எரிசக்தி விலை அதிர்ச்சிகளை எதிர்கொள்ளும் வலிமையைப் பெற்றுள்ளன.

ஆனால் உதாரணமாக, பிரிட்டன் எரிசக்தி நுகர்வில் பாதிக்கும் மேலானது எண்ணெய் மற்றும் எரிவாயுவாக இருப்பதால், வாகன ஓட்டிகள், வீட்டு வெப்பமூட்டும் கட்டணங்கள் மற்றும் உற்பத்தி போன்ற எரிசக்தி அதிகம் தேவைப்படும் துறைகள் இப்போது பாதிப்பிற்கு உள்ளாகின்றன. இது உலகில் பல நாடுகளுக்கும் பொருந்தும்.

எதிர்காலத்தில் விலைகள் எப்படி மாறும் என்பதிலேயே எல்லாம் இல்லை. அரசாங்கம் எப்படிப் பதிலளிக்கிறது என்பதிலும் இது சார்ந்துள்ளது. பல அரசுகள் பெரிய அளவிலான உதவிகளை வழங்கத் தயங்குவதில் ஆச்சரியமில்லை, ஏனெனில் அவர்களின் நிதிநிலையும் நெருக்கடியில் உள்ளது.


### ஆசியாவில் நிலவரம் என்ன?

இருப்பினும், ஹோர்மூஸ் நீரிணை வழியாகக் கிழக்கு நோக்கிச் செல்லும் எண்ணெய் மற்றும் திரவ எரிவாயுவின் வழக்கமான வாடிக்கையாளர்களுக்கே உடனடி அச்சுறுத்தல் அதிகமாக உள்ளது.


ஆசியா தனது கச்சா எண்ணெய்யில் 59 சதவீதத்தையும், தென் கொரியா 70 சதவீதம் வரையிலும் மத்திய கிழக்கிலிருந்து பெறுகின்றன. பாதிப்பு மற்றும் செலவு குறித்த கவலைகளால் அங்குப் பங்குகள் சரிந்துள்ள நிலையில், நாட்டின் சிப் தயாரிக்கும் தொழில்துறைக்கு ஏற்படக்கூடிய ஆபத்து குறித்தும் அரசியல்வாதிகள் எச்சரித்துள்ளனர்.தென் கொரியா உலகின் மெம்மரி சிப்களில் பாதிக்கும் மேலானதைத் தயாரிக்கிறது.

மற்ற இடங்களில், எரிபொருள் ரேஷன் முறை, வாரத்திற்கு நான்கு நாட்கள் வேலை மற்றும் கல்வி நிறுவனங்களை மூடுதல் போன்ற நடவடிக்கைகளை இலங்கை, வங்கதேசம் மற்றும் (22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! வழக்குகளில் சாதகமான சூழல் ஏற்படும். ஆக்கபூர்வமான யோசனைகளை செயல்படுத்தி எதிலும் வெற்றி காண்பீர்கள். தெளிவான மன நிலை இருக்கும். செயல்திறன் அதிகரிக்கும் நெருக்கடியான சமயத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தாமதப்படும். தொழில், வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். சில நேரங்களில் முக்கிய முடிவு எடுப்பதில் தயக்கம் காட்டுவீர்கள்.





ரிஸபராசி அன்பர்களே! பக்குவமான அணுகு முறையினால் எல்லா காரியங்களிலும் வெற்றி பெறுவீர்கள். செயல்திறமை அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எண்ணிய காரியங்கள் கைகூடும். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்வது பற்றிய ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். உத்யோகத்தில் பணிசுமை குறைந்து காணப்படும்.





மிதுனராசி அன்பர்களே! புத்தி சாதுரியமும் அறிவு திறனும் அதிகரிக்கும். எதைச் செய்வது எதை விடுவது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு தாமதப்படும். திடீர் சோர்வு உண்டாகும். அடுத்தவரிடம் உங்களது செயல்திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் அவசரமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. பேச்சாற்றல் மூலம் தொழில் லாபம் கூடும்.





கடகராசி அன்பர்களே! பணிச்சுமை அதிகரிக்கும். எந்த ஒரு விஷயத்திலும் முடிவு எடுப்பது தாமதமாகும். அடுத்தவர் பிரச்சனைகளில் தலையிடுவதை தவிர்ப்பதும் நல்லது. பணவரத்து எதிர்பார்த்த நேரத்தை விட தாமதமாக வந்து சேரும். பூர்வீக சொத்துக்களில் இருந்து பிரச்சனைகள் தீரும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடுகள் ஏற்பட்டு பின்னர் விலகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக வேலைகளை செய்வது நல்லது.





சிம்மராசி அன்பர்களே! சுணக்க நிலையில் இருந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பெறும். மன சஞ்சலம் நீங்கும். யாரையும் நேருக்கு நேர் எதிர்க்காமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். வயிறு தொடர்பான நோய்கள் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் மெத்தனமாக காணப்பட்டாலும் பணவரவு இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்பட்டு நீங்கும்.




கன்னிராசி அன்பர்களே! சொந்த பந்தங்களுக்குள் இணக்கம் ஏற்படும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு காரியத்தில் சாதகமான பலன் கிடைக்கும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். முன்கோபம் குறையும். பணவரத்து அதிகரிக்கும். மனதில் புதுதெம்பும் உற்சாகமும் தோன்றும். தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். குடும்பத்தில் அமைதி ஏற்படும்.





துலாம் ராசி அன்பர்களே! திடமான நம்பிக்கையுடன் எதையும் செய்வீர்கள். எதிலும் சாதகமான நிலை காணப்படும். பணவரத்து அதிகரிக்கும். வாக்கு வன்மை ஏற்படும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் செவிசாய்ப்பார்கள். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொலைதூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். லாபம் கூடும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள்.





விருச்சிகராசி அன்பர்களே! சோதனைகளையும், தடைகளையும் தகர்த்தெறிவீர்கள். எல்லா காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் லாபம் கிடைக்கும். நோய்கள் தீரும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நன்மை, தீமை பற்றிய கவலை இல்லாமல் தலை நிமிர்ந்து நடப்பீர்கள். தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். கடன் பிரச்னைகள் குறையும்.








தனுசுராசி அன்பர்களே! கடின உழைப்பினால் வெற்றி பெறுவீர்கள். எதிலும் முன்னேற்றம் காணப்படும். இஷ்டத்திற்கு விரோதமாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். வீண் ஆசைகள் மனதில் தோன்றும். கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நன்மை தரும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம்.




மகரராசி அன்பர்களே! நிதான போக்கைக் கடைபிடித்து வெற்றி பெறுவீர்கள். எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. சுலபமாக முடிந்து விடும் என்று நினைக்கும் காரியம் கூட சற்று தாமதமாகலாம். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் இருந்த இழுபறி அகலும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் அலைச்சலுக்கு பின் நடந்து முடியும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் ஏற்படலாம்.




கும்பராசி அன்பர்களே! தன்னம்பிக்கை அதிகரிக்கும். கணவன் மனைவி குடும்ப ஒற்றுமையில் சீரான நிலையே காணப்படும். ஆயுள் அபிவிருத்தி பெறுவதற்கான வகையில் நற்செயல்கள் இருக்கும். தந்தை வழி சார்ந்த உறவினர்கள் தங்களுக்கு தேவையான உதவிகளை உங்களிடம் கேட்டு பெறுவார்கள். குடும்பத்தினர் மகிழ்ச்சிக்காக சுபமங்களச் செலவுகளை செய்யும் வாய்ப்புகள் உருவாகும்.




மீனராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். தைரியம் அதிகரிக்கும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும். எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் செய்து முடிப்பதில் துணிச்சல் உண்டாகும். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படலாம். உறவினர்களுடன் பேசும் போது கவனமாக பேசுவது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## லெபனான் மீதான இஸ்ரேலின் தரைவழிப்...

(14ம் பக்கத் தொடர்ச்சி) இணைத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி, இன்னும் ஒரு படி மேலே சென்றார் இஸ்ரேலின் `எல்லைகளை மாற்றியமைப்பது' அவசியம் என்று அவர் கூறினார். நான் இங்கே மிகத் திட்டவட்டமாகக் கூறுகிறேன்... ஒவ்வொரு அறை யிலும், ஒவ்வொரு விவாதத்திலும் கூட புதிய இஸ்ரேலிய எல்லையாக `லிட்டானி' நதியே அமைய வேண்டும்.' என்று அவர் ஒரு நேர்காணலில் தெரிவித்தார்.

தெற்கு லெபனான் மீது படையெடுப்பதற்கான இஸ்ரேலின் ஏற்பாடுகளில், லிட்டானி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள பாலங்கள் மீதும், இரு நாடுகளையும் பிரிக்கும் எல்லைக்கு அருகில் உள்ள லெபனான் வீடுகள் மீதும் குண்டுவீசுவது ஆகியவை அடங்கும். நாட்டின் தெற்குப் பகுதிக்கு மிக முக்கிய இணைப்பாகத் திகழும் `காஸ்மியே' பாலம் மீது ஞாயிறன்று இஸ்ரேல் நடத்திய தாக்குதலை, லெபனான் அதிபர் ஜோசப் அவுன் `தரைவழிப் படையெடுப்பிற்கான ஒரு முன்னறிவிப்பு' என்று வர்ணித்தார்.

லெபனான் மீது இஸ்ரேல் சமீபத்தில் நடத்திய தாக்குதல்களில் ஒன்பது பேர் கொல்லப்பட்டதாக, அந்நாட்டின் சுகாதார அமைச்சகம் தெரிவித்திருப்பதை லெபனான் அரசு ஊடகங்கள் புதன்கிழமை அதிகாலையில் மேற்கோள் காட்டின. தெற்கு நகரமான `அட்லூன்' மீது `இஸ்ரேலிய எதிரிப் படைகள் நடத்திய தாக்குதலில்' நான்கு பேர் கொல்லப்பட்டதாகவும், `மியே மியே' அகதிகள் முகாமில் உள்ள ஒரு குடியிருப்பு மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மேலும் இருவர் கொல்லப்பட்டு, நால்வர் காயமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தெற்குப் பகுதியிலேயே அமைந்துள்ள `ஹப்பூஷ்' நகர் மீது இஸ்ரேல் முன்னதாக நடத்திய மற்றொரு தாக்குதலில், குறைந்தது மூன்று பேர் கொல்லப்பட்டு, 18 பேர் காயமடைந்தனர். வடக்கு இஸ்ரேலில் மீண்டும் மீண்டும் ஒலித்த வான்வழித் தாக்குதல் எச்சரிக்கை ஒலிகளால் மக்கள் பாதுகாப்பு முகாம்களுக்குள் தஞ்சமடைந்த நிலையில் லெபனானிலிருந்து ஏவப்பட்ட ராக்கெட் தாக்குதலில் செவ்வாயன்று ஒரு பெண் கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அமெரிக்கா - ரஷ்யா - சீனா ஈரான் போரால்

(21ம் பக்கத் தொடர்ச்சி) பிலிப்பின்ஸ் போன்ற நாடுகள் அறிமுகப்படுத்தியுள்ளன ஆனால் இந்த கண்டத்தில் அதிக எரிபொருளைப் பயன்படுத்துபவர்கள் திட்டமிடல் மற்றும் ராஜீய நடவடிக்கை மூலம் ஓரளவு பாதுகாப்பாக உள்ளனர்.

சீனா சில மாதங்கள் பயன்படுத்துவதற்கு இணையான இருப்புகளை வைத்துள்ளதுடன், இரானிடமிருந்து கொள்முதலை அதிகரித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்தியாவிற்கும் இது பொருந்தும், ஏனெனில் அதுவும் ரஷ்யாவை நோக்கித் திரும்புவதற்கான அந்தத் தற்காலிக அனுமதியை பயன்படுத்திக் கொள்கிறது.என்ன நடக்கும் என்பது நிச்சயமாக இந்தப் போரின் எதிர்கால நகர்வுகளைப் பொறுத்தே அமையும். ஆனால், இரான் மீதான தாக்குதல்களைத் தொடங்குவதற்கு முன்னதாகத் திட்டமிடும்போது, இந்த பொருளாதார விளைவுகளில் சிலவற்றை அமெரிக்கா முழுமையாக எதிர்பார்த்திருக்க வாய்ப்பில்லை.

மேலும் போர் நீடித்தால், தனிப்பட்ட நாடுகளுக்கு ஏற்படும் சேதம் மட்டுமல்லாமல், அது உலகளாவிய அளவில் பரவி பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும் அபாயமும் உள்ளது. நன்றி:- பிபிசி

## யாழில் விரிவுரையாளர் படுகொலை:- மகள்

(12ம் பக்கத் தொடர்ச்சி) கணவன் மீது சந்தேகம் நிலவுவதாகவும் குறிப்பிட்டு இருந்துள்ளார். ஆனாலும் பொலிஸார் ஆரம்பத்தில் இதனை ஒரு குடும்ப பிரச்சனையாக கருத்தி விசாரணைகளில் தீவிரம் காட்டாத நிலைமை காணப்பட்டதாகவும் அதனை அடுத்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக துணைவேந்தர் ஆகியோர் வடமாகாண மூத்த பொலிஸ் அதிகாரிகளுக்கு கோரிக்கைகளை முன் வைத்ததன் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை தீவிரபடுத்தினர் அதேவேளை , தாயின் வங்கி அட்டையை பயன்படுத்தி பரந்தனில் பணம் பெறப்பட்டமை தாயின் காருக்கு QR மூலம் திருகோணமலையில் எரிபொருள் நிரப்பியமை உள்ளிட்ட தகவல்களை மகன் பொலிஸாருக்கு வழங்கி இருந்தார்.

அவற்றின் அடிப்படையில் திருகோணமலைக்கு சென்ற விசேட பொலிஸ் குழு காருக்கு எரிபொருள் நிரப்பிய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் விசாரணைகளை முன்னெடுத்து கணவன் - மனைவி இருவரும் திருகோணமலையில் வாடகைக்கு வீடு எடுத்து தங்கி இருந்ததனை அறிந்து அங்கு விரைந்து அவர்கள் இருவரையும் மீட்டு யாழ்ப்பாணம் அழைத்து வந்தனர். கடந்த வெள்ளிக்கிழமை இருவரையும் மீட்டு யாழ்ப்பாணம் அழைத்து வரும் போது இருவரிடமும் விரிவுரையாளர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த போதிலும் இருவரும் அது தொடர்பில் முன்னுக்கு பின் முரணான தகவல்களையே வழங்கி வந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் அழைத்து வந்து வெள்ளிக்கிழமை இரவு முழுவதும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மறுநாள் சனிக்கிழமையும் தொடர் விசாரணைகளை முன்னெடுத்த வேளையே விரிவுரையாளரை கொலை செய்த சம்பவத்தை கூறி தனது வாக்கு மூலத்தை பொலிஸாருக்கு மருமகன் கூறியுள்ளார்.

அதேவேளை தான் கொலைக்கு எந்தவகையிலும் உடந்தையாக இருக்கவில்லை எனவும் கணவன் மீதான பயத்தின் காரணமாக அவரது செயற்பாடு குறித்து வெளியில் கூறவில்லை என விரிவுரையாளரின் மகள் தனது வாக்கு மூலத்தில் கூறியுள்ளார்.

மருமகனின் வாக்கு மூலத்தின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மூன்று நாட்களின் பின் சடலத்தை மீட்டமையால் சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டுள்ளது. சடலத்தை மீட்ட பொலிஸார் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சடலத்தை அனுப்பி வைத்தனர். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்று பரிசோதனையில் உடலில் காயங்கள் எதுவும் இன்றிய நிலையில் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமை கண்டறியப்பட்டது.

அதனை அடுத்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் , விரிவுரையாளரின் இறுதி கிரியைகள் கடந்த 22 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

# ஏர்கனடா தலைமை நிர்வாக அதிகாரியின் இரங்கல் செய்தி குறித்து பிரதமர் விசனம்!

ஏர் கனடா விமான விபத்து தொடர்பில் விமான நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி வெளியிட்ட இரங்கல் செய்தி கனடாவில் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

மார்ச் மாதம் 22ஆம் திகதி, கனடாவின் மொன்றியலிலிருந்து, அமெரிக்கவின் நியூயார்க்கிலுள்ள LaGuardia விமான நிலையத்தில் சென்று இறங்கிய ஏர் கனடா விமானம் ஒன்று, தீயணைக்கும் ட்ரக் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விமான ஓடுபாதையின் குறுக்கே வேகமாக வந்த தீயணைப்பு வாகனம் ஒன்றின் மீது மோதி விமானம் விபத்துக்குள்ளானதில் விமானத்தின் விமானிகள் இருவரும் உயிரிழந்தார்கள்.

விமான விபத்தைத் தொடர்ந்து, ஏர் கனடா நிறுவன தலைமை நிர்வாக அதிகாரியான மைக்கேல் (Michael Rousseau) சமூக ஊடகமான எக்ஸில் இரங்கல் செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தார்.

ஏர் கனடா விமான விபத்தில் இரண்டு உயிர்கள் பலியானதால் தான் ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாக தெரிவித்த மைக்கேல், அந்த விபத்து, ஏர் கனடாவுக்கு ஒரு கருப்பு தினம் என்றும் குறிப்பிட்டிருந்தார். ஆனால் மைக்கேலின் செய்தி பெரிய அளவில் கனடாவில் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

காரணம், தான் வெளியிட்டிருந்த வீடியோவில் மைக்கேல் ஆங்கிலத்தில் பேசியிருந்தார்.

விடயம் என்னவென்றால் கனடாவின்



அலுவல் மொழிகள் ஆங்கிலம் மற்றும் ஃப்ரெஞ்சு ஆகும். அத்துடன் விமான விபத்தில் உயிரிழந்த விமானிகளில் ஒருவரான ஆண்டோயின் ஃபாரஸ்ட் ஃப்ரெஞ்சு மொழி பேசுபவர். ஆக மைக்கேல் வெளியிட்ட இரங்கல் செய்தியில், அவர் ஆங்கிலம், ஃப்ரெஞ்சு ஆகிய இரண்டு மொழிகளிலும் பேசியிருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலரும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, கனடா பிரதமரான மார்க் கார்னியே, தான் மைக்கேலின் செய்தியால் ஏமாற்றமடைந்ததாக தெரிவித்துள்ள விடயம் பெரிதும் கவனம் ஈர்த்து வருகிறது.

ஏர் கனடா நிறுவன தலைமை நிர்வாக அதிகாரியின் ஒற்றை மொழி இரங்கல் செய்தியில் இரக்கமில்லை என்றும், முன்பின் யோசிக்காமல் அந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளதாகவும் பிரதமர் கார்னி விமர்சனம் முன்வைத்துள்ளார்.

நாம் இரு மொழி பேசும் நாட்டில் வாழ்கிறோம் என்பதில் பெருமையுடையவர்கள், அப்படியிருக்கும் போது, எப்படிப்பட்ட சூழலானாலும், இரு அலுவலக மொழிகளிலும் தகவல் தொடர்பு மேற்கொள்வது ஏர் கனடா போன்ற நிறுவனங்களின் கடமையாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கனடா பிரதமருடன் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி பேதமின்றி ஏராளமான நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏர் கனடா நிறுவன தலைமை நிர்வாக அதிகாரியான மைக்கேலுக்கு கண்டனம் தெரிவித்து வருகிறார்கள்.

## அமெரிக்கா பின்வாங்கினாலும் போரை நிறுத்தக் கூடாது இஸ்ரேலின் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

மத்திய கிழக்கில் போர்ச் சூழலைத் தணிப்பதற்காக அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் தொடங்கியிருந்தாலும், ஈரானிய ஆட்சி முழுமையாகக் கவிழ்க்கப்படும் வரை போரை நிறுத்தக் கூடாது என்று இஸ்ரேலிய எதிர்க்கட்சித் தலைவர் அவிக்டோர் லிபர்மேன் வலியுறுத்துகிறார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், ஈரான் மீதான தாக்குதல்களை ஐந்து நாட்களுக்கு நிறுத்தி வைக்கும் முடிவை எடுத்ததைத் தொடர்ந்து, இஸ்ரேலிய எதிர்க்கட்சித் தலைவர் அவிக்டோர் லிபர்மேன் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் நிலவும் நேரத்தில், அரசாங்கம் உள்நாட்டுச் சட்டங்களில் மட்டுமே கவனம் செலுத்துவதாகக் கூறி அவர் இஸ்ரேலிய அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் அமெரிக்கத் தளங்கள் அமைந்துள்ள ஜோர்டான், ஈராக் போன்ற நாடுகள் மீது ஈரான் நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதல்கள், உலகளாவிய சந்தைகளையும்



விமானப் பயணத்தையும் ஏற்கனவே கடுமையாகப் பாதித்துள்ளன.


Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- Vistation
- Funeral & Memorial Service
- Reception
- Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com




# பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான சட்ட ஆட்சியை பலப்படுத்துவதிலேயே நாட்டின் சுபீட்சம் தங்கியுள்ளது - இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி!

ஒரு நாட்டின் சுபீட்சம் என்பது அந் நாட்டில் பாதிக்கப்பட்டவர்களுக்கான சட்டத்தின் ஆட்சி எந்தளவுக்கு பலப் படுத்தப்பட்டுள்ளது என்பதிலேயே தங்கியிருக்கிறது. பல தசாப்தகால மாகத் தொடரும் நிச்சயமற்ற தன்மை யின் ஊடாக உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலை வலியுறுத்துவதற் குப் பாதிக்கப்பட்ட தரப்பினர் கொண் டிருக்கும் உரிமையை அழித்து விடமுடியாது என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க்- ஆன்ரே பிரான்ஞ் தெரிவித்துள்ளார்.

இவ்வாரத் தொடக்கத்தில் யாழ்ப்பாண த்துக்கு விஜயம் மேற்கொண்டிரு க்கும் ஐ.நா வதிவிடப்பிரதிநிதி மார்க்- ஆன்ரே பிரான்ஞ், அங்கு சிவில் சமூகப்பிரதிநிதிகள், அரசியல் கட்சி களின் பிரதிநிதிகள், வலிந்து காணாம லாக்கப்பட்டோரின் உறவினர்கள், வட மாகாண ஆளுநர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் ஆகியோர் உள்ளடங்க லாகப் பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களை நடாத்தி வருகிறார்.

அதற்கமைய கடந்த 24 மார்ச் 2026 செவ்வாய்க்கிழமை வலிந்து காணாம லாக்கப்பட்டோரின் உறவினர்களைச் சந்தித்து அவர்களது கரிசனைகளைக் கேட்டறிந்த வதிவிடப்பிரதிநிதி, இது குறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளப்பக்கத்தில் செய்திருக்கும் பதிவில், 'ஒரு நாட்டின் சுபீட்சம் என்பது அந்நாட்டில் பாதிக்கப்பட்ட வர்களுக்கான சட்டத்தின் ஆட்சி எந்தளவுக்கு பலப்படுத்தப்பட்டுள்ளது என்பதிலேயே தங்கியிருக்கிறது. பல தசாப்த காலமாகத் தொடரும் நிச்சய மற்ற தன்மையின் ஊடாக உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலை வலி யுறுத்துவதற்குப் பாதிக்கப்பட்ட தரப்பி னர் கொண்டிருக்கும் உரிமையை அழித்துவிடமுடியாது' எனச் சுட்டிக் காட்டியுள்ளார். அதனைத் தொடர்ந்து இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறி தரனுடன் நடைபெற்ற சந்திப்பின் போது, மாகாணசபைத்தேர்தல்களை நடாத்துவதில் நிலவும் தாமதம் காரண மாக குறிப்பாக வட மாகாணத்தில் ஆட்சியியல் நிர்வாகக் கட்டமைப்பில் நிலவும் இடைவெளி பற்றி சிறிதரன் எடுத்துரைத்ததாக வதிவிடப்பிரதிநிதி



மார்க் ஆன்ரே பிரான்ஞ் தெரிவித்து ள்ளார். அத்தோடு பொதுவான சவால் களை எதிர்கொண்டு மீள்வதற்கான கூட்டிணைந்த நடவடிக்கைகள், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு மற்றும் வட மாகாணப் பொருளாதார த்தைப் பலப்படுத்தல் என்பவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய தன் அவசியம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பாதுகாப்புக் கேள்விக்குறி:- சர்வதேசத்துக்கு அவசர கடிதம்!



இலங்கையில் சட்டத்தரணிகள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பில் பாரதூரமான நிலைமை ஏற்பட்டுள்ள தாகத் தெரிவித்து, நாட்டின் பிரதான எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒன்றிணை ந்து சர்வதேச வத்தியல் அமைப்புகளு க்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ள னர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாச, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பாட்டலி சம்பிக்க ரண வக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, ஜீவன் தொண்டமான் மற்றும் மனோ கணேசன் உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்கள் இக் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

கடிதம் அனுப்பப்பட்டுள்ள சர்வதேச அமைப்புகள்: சர்வதேச சட்டத்தரணி கள் சங்கம், பொதுநலவாய சட்டத் தரணிகள் சங்கம், சர்வதேச நீதிபதிகள் ஆணைக்குழு, இளம் சட்டத்தரணி களின் சர்வதேச சங்கம், சர்வதேச ஜனநாயக சட்டத்தரணிகள் சங்கம், சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International), மனித உரிமைகள் கண்காணிப்பகம் சர்வதேச மனித உரிமைகள் கூட்டமைப்பு, சித்திர வதைக்கு எதிரான உலக அமைப்பு, மனித உரிமைப் பாதுகாவலர்களு க்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் ஐநா மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகம் உள்ளிட்ட 12 முக்கிய அமைப்புகளுக்கு இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள்:

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்: நாட் டில் நவீன ரகத் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட படுகொலைகள் அதிகரித் துள்ளன.

உயிரிழப்புகள்: கடந்த ஆண்டில் மட்டும் 60க்கும் மேற்பட்டோரும், இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 9 பேரும் இவ்வாறான வன்முறைகளால் உயிரிழந்துள்ளனர்.

நிர்வாகத் தோல்வி: பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் பொது பாதுகாப்பு மற்றும் நாடாளு மன்ற விவகார அமைச்சு தோல்வி யடைந்துள்ளதாக அக்கடிதத்தில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் நீதித்துறை மற்றும் சிவில் பாதுகாப்பிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் குறித்து சர்வதேச சமூ கம் அவதானம் செலுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர்கள் இக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க மலையகத் தமிழர்களை அவதூறாகப் பேசிய பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா ராமநாதனுக்கு எதிராக, சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு ள்ளது.